# நாடார் மகாஜன சங்கம்

## 12-வது மகா நாடு

## அருப்புக்கோட்டை.



1928ஸு ஜூலைமீ 4, 5, 6உ களுக்கு விபவஸு ஆனி மீ 21, 22, 23உ களில்
இதற்கென விசித்திரமா யமைத்திருக்கும்
"பாண்டிய விலாஸ்" கொட்டகையில் நடை பெறும்.
குமாரமங்கலம் ஜமீன்தாரும், சென்னை கவர்ன்மெண்ட் முதல் மந்திரியுமான கனம். டாக்டர்.

**P. சுப்பராயன் M.A., B.C.L., L.L.D. அவர்கள்**

மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள்.

பொறையார், **ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்கள்—**
பிரஸிடெண்ட்.

## ஸத்திய தரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 5. அத்தியாயம் 9.

ஹரித்துவாரத்திற்கு இரண்டாவது தடவையாக நான் கும்பமேளத்திற்குச் சென்றேன்.

ஸத்தியாக்கிரக ஆசிரமம் 1915-ம் வருஷம் மே மாதம் 25 ந் தேதி ஸ்தாபிக்கப் பட்டது. நான் ஹரித்துவாரத்திலேயே குடியேறி விட வேண்டுமென்று சிரத்தானந்தஜீ விரும்பினார். கல்கத்தா நண்பர்களிற் சிலர் வைத்திய நாதிடத்தில் தங்கியிருக்கலாமென்று சொன்னார்கள். வேறு பலர் ராஜகோட்டைக்குச் சிபார்சு செய்தார்கள். ஆனால் நான் ஆமதாபாத் வழியாகச் சென்ற பொழுது பலர் அங்கு நான் தங்கியிருக்க வேண்டுமென்று வற்புறுத்தியதுடன், ஆசிரமச் செலவை ஏற்றுக் கொள்ளுவதாகவும், குடியிருப்புக்கு ஒரு வீடு கொடுப்பதாகவும் சொன்னார்கள்.

ஆமதாபாத்தில் எனக்கு விசுவாசமிருந்தது. நான் குஜராத்தியானதால் குஜராத்தி பாஷை மூலமாகவே தேசத்திற்கு விசேஷ கைங்கர்யம் செய்ய முடியுமென்று நான் நினைத்தேன். தவிரவும், ஆமதாபாத்தில் கைத் தறி நெசவு அதிகமாக நடந்துவந்ததால் குடிசைத் தொழிலாகிய நெசவுத் தொழிலை உயிர்ப்பிப்பதற்கு அது ஏற்ற இடமென்றும் எனக்குத் தோன்றியது. மேலும், ஆமதாபாத்தானது கூர்ஜரத்தின் தலைநகரானதால் மற்ற இடங்களை விட அந்த இடத்திலுள்ள தனவந்தர்களிட மிருந்து பண உதவி அதிகம் கிடைக்கலாமென்ற நம்பிக்கையும் எனக்கு இருந்தது.

தீண்டாமை விலக்கைப் பற்றி நான் ஆமதாபாத் நண்பர்களுடன் யோசித்தேன். சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது மற்ற விஷயங்களில் தகுதியுடையவராக விருக்கும் தீண்டாத வகுப்பினர் ஒருவரை ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் நான் சொன்னேன்.

"உங்களுடைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து வைக்கக்கூடிய தாழ்ந்த வகுப்பினர் யார் இருக்கிறார்கள்?" என்று ஒரு வைஷ்ணவர் என்னை அலக்ஷியமாகக் கேட்டார்.

முடிவாக ஆமதாபாத்தில் ஆசிரமத்தை ஏற்படுத்துவதென்று நான் முடிவு செய்தேன்.

இட வசதி சம்பந்தப்பட்டவரையில் ஆமதாபாத் பாரிஸ்டரான ஸ்ரீமான் ஜீவன்லால் தேசாய் விசேஷ உதவி செய்தார். அவருடைய கோக்ராப் பங்களாவை வாடகைக்கு விடுவதாகச் சொன்னார். அதை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளுவதென்று நாங்கள் முடிவு செய்தோம்.

முதன்மையாக ஆசிரமத்திற்கு என்ன பெயரிடுவதென்பதை முடிவு செய்ய வேண்டியிருந்தது. நான் நண்பர்களைக் கலந்து யோசித்தேன். சேவாசிரமம், தபோவனம் முதலிய பெயர்களை வைக்கலாமென்று சிலர் யோசனை சொன்னார்கள். சேவாசிரமம் என்ற பெயர் பொருத்தமாக இருக்குமென்று எனக்குத் தோன்றியது. ஆனால், எத்தகைய சேவை யென்பதையும் பெயர் குறிப்பிடக் கூடியதாக இருக்க வேண்டுமென்று நான் நினைத்தேன். தபோவனம் என்பது எனக்குப் பொருத்தமானதெனத் தோன்றவில்லை. அது அதிக ஆடம்பரமானதாக இருந்தது. தபஸில் எங்களுக்கு விசேஷ ஆர்வ மிருந்த போதிலும் நாங்கள் தபஸிகள் என்று சொல்லிக் கொள்ளுவதற்கில்லை. சத்தியத்தைக் கடைப்பிடிப்பது தான் எங்களுடைய நோக்கம். அதற்கான வழியில் வேலை செய்ய வேண்டுமென்றே எங்களுடைய கொள்கை. தென்னாப்பிரிக்காவில் நான் பரீக்ஷை செய்த முறையை இந்தியாவுக்கு உபதேசித்து எந்த அளவு அதை இங்கு கையாளுவது சாத்திய மென்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். ஆகையால், எங்களுடைய கொள்கையையும், நோக்கத்தையும் வெளிப்படுத்துவதற்காக எங்களுடைய ஆசிரமத்திற்கு ஸத்தியாக்கிரக ஆசிரமமென்ற பெயரைக் கொடுப்பதென்று நான் முடிவு செய்தேன்.

ஆசிரமத்தை நடத்தி வைத்துக் கொண்டு வருவதற்குச் சில விதி முறைகளை ஏற்படுத்த வேண்டியிருந்தது. நகல் விதிகளைத் தயாரித்து, அவைகளைப் பற்றிச் சில நண்பர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன். அவ்விதம் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்களில் ஸர். குருதாஸ் பானர்ஜீ தெரிவித்த அபிப்பிராயம் இன்னமும் என் மனதை விட்டகல வில்லை. அவர்கள் விதிகளை ஒப்புக் கொண்ட போதிலும், தற்கால சந்ததிகளிடத்தில் அடக்கம் குறைவாக இருப்பதால் அடக்கம் இருக்க வேண்டுமென்பதையும் விதிகளில் ஒன்றாகச் சேர்க்க வேண்டுமென்று அவர் யோசனை சொன்னார். இந்த குறை இருந்து வந்ததை நான் கவனித்து வந்திருந்த போதிலும், இதை பிரதிக்ஞையில் ஒரு அம்சமாகச் சேர்த்தால் அது அடக்கமாக இல்லாமல் போய்விடுமென்று நான் நினைத்தேன். தன்னை மறந்து விடுவது தான் உண்மையான அடக்கம். தன்னை மறந்து விடுவதே மோக்ஷமென்பது. அதுவே ஒரு கொள்கையாக இருக்க முடியாதாயினும், அதை அடைவதற்குச் சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. மோக்ஷத்தை அடைய விரும்புகிறவரிடத்திலாவது, ஊழியரிடத்திலாவது அடக்க மில்லாவிடின் மோக்ஷத்தையாவது, சேவையையாவது அவர்கள் விரும்புவதில் அர்த்த மில்லை. அடக்க மில்லாத ஊழியம் சுயநலத்தைத் தான் குறிக்கும். இந்த சந்தர்ப்பத்தில் எங்கள் கோஷ்டியில் 13 தமிழர்கள் இருந்தனர். இவர்களில் 5 தமிழ் யுவர்கள் தென்னாப்பிரிக்காவிலிருந்து என்னுடன் வந்தவர்கள். இவர்கள் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்தவர்கள். நாங்கள் ஸ்திரீகளும் புருஷர்களுமாக 25 பேர்கள் இருந்தோம். இவ்விதமே ஆசிரமம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. எல்லோரும் ஒரு சமையலறையில் பாகம் செய்ததைச் சாப்பிட்டு, ஒரே குடும்பத்தினரைப் போல் இருந்து வந்தோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# ஆயிரக் கணக்கான அகராதிகளில் இல்லாத அதிசயம்.

## "தமிழ்லெக்ஸிகான்".

"தமிழ் லெக்ஸிகான்" என்பது இச் சென்னை கவர்ன்மெண்டாரால் லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்து அச்சிட்டு வரும் ஒரு அகராதியாகும். இது பல வித்துவான்களைக் கொண்டு எழுதப்பட்டு வருகிறது. அது இந்த வருடம் (1928) ஜூன் மாதம் நான் காம் தேதியோடு, தி வரைக்கும் அச்சிட்டு, வால்யம் 111. பாகம் 11 ஆகக் கணித்து வெளிப்படுத்தப்பட்டது.

இந்த வால்யத்தில் நம் சாதிக்குரிய பெயர்களில் கள் ளிறக்குந் தொழிலை விளக்கக் கூடிய தெனக் காட்ட வெகு பிரயாசைப்பட்டு எழுதப்பட்டுள்ளது. அப்படி எழுதினவர்களும் "பேரேடு, குறிப்பேடு" என்பனபோன்றவைகளைக் கையில் உட்பட்ட நூற்களைக் கொண்டு, அப் பதத்தின் நேர் அர்த்தத்தை வினவினார்களில்லை.

தென் திருவிதாங்கூர் ஸ்ரீமான் வி. சங்கையா நாடார் அவர்கள் இம் மாதம் "நாடார் குல மித்திரன்" 9-வது மலர், 41-வது இதழ், 3-வது பக்கத்தில் எழுதிய வியாசத்தின் சாராம்சத்தை நம்மில் சிலர் கடைப்பிடித் தொழுகாது எல்லாம் துறந்து விட்டோம்; சாதியில்லை; சமயமில்லை; சகோதரத்துவம் பழுத்துத் தொங்குகிறது என வாய்ப் பறை யடித்துக் கொண்டு திரியும் அற்ப சந்தோஷிகளுக்கு இது ஒரு படிப்பினையாகும்.

இவ்விதமாகவே வேதம் முதலிய நூற்களிலும், அவரவர் தம் மனம் போனவாறு சுலோகங்களையும், பாடல்களையும் காலக் கிரமங்களில் சேர்த்தும், வீண் பொருள்களை எழுதியும் கெடுத்து விட்டார்கள். அந்த அற்ப செய்கைகளால் இப்பொழுது இந்து மதத்திற்கே ஒரு பெருத்த ஆபத்து வந்து விட்டது. இவ்விதம் காலந் தோறும் ஒவ்வொரு நூலிலும், வீண் விஷயங்கள் சேர்த்துக் கெடுத்து வருவதைப் போல, இந்த "தமிழ் லெக்ஸிகான்" என்னும் அகராதியிலும் நம் சாதியைத் தாழ்ந்த வேளுமென்னும் எண்ணங் கொண்டு எந்த நூலிலும் காணப்படாத தாழ்ந்த பொருளைத் தந்து எழுதி யுள்ளார்கள். அவை வருமாறு:—

"சான்றாண்மை. சால்பு—ஆண்மை. கள் ளிறக்குந் தொழில். சான்றாண்மை பயின்றார். (குமர. பிர. மதுரைக். 24.)

எனப் பதச் சேதமும், பொருளும், மேற்கோள் நூலுங் காட்டப் பட்டுள்ளது.

சான்றாண்மை என்பது சான்றவர், சான்றார், சான்றோர் என்னுஞ் சொற்களுக்கு மூல பதமாகும். இம் மூல மொழியாகிய சான்றாண்மை என்பதற்குக் கள் சம்பந்தமுரியதெனக் காட்டி விட்டால், சான்றாரையும் கள் தொழிலாளரென சுலபமாகத் தெரிவித்து விடலாமென வெண்ணி அப் பொருளைத் தந் தெழுதினார்கள்.

சான்றாண்மை என்பதற்கு ஆயிரக் கணக்கான அகராதிகளிலும், சங்க நூற்களிலும், இன்னும் மற்ற நூற்களிலும், ஊக்கம், ஞானம் முதலிய பல உயர்ந்த பொருள்களைத் தந்து எழுதப் பட்டுள்ளதே யன்றி, "கள் ளிறக்குந் தொழில்" என்னும் பொருளையும் தருமெனக் காட்டப்பட்டிலலை.

ஆனால் குமரகுருபரர் சுவாமிகள் தாம் இயற்றிய மதுரைக் கலம்பகத்தில் தெரிவித்துள்ளதாகக் காட்டி யுள்ளார்கள். அக் குமர குருபரர் சுவாமிகள் தென் தேசத்து வேளாள ராயினும் மின் நூலவர்களைப் போல் பொருளைக் கொண்டு பாடியவராகும். அப் பொருளை விளக்க அவருக்கு முன்னுள்ள நூற்களில் ஏதாவது பிரமாணம் உண்டா? ஒன்றுங் கிடையாது. அல்லது இந்த "தமிழ்லெக்ஸிகான்" கமிட்டியாராவது, அந்த ஒரு பாடலன்றி, வேறு பாடல் காட்ட முடியுமா? ஒருக்காலும் முடியாது. இவர்கள் மன சாட்சியாவது அப் பொருளையே தருமெனச் சொல்லுமா? அந்த மதிய அனுசரவான செய்யுளை ஒரு பிரமாணமாகக் காட்டியது துவேஷத்தனமே யாகும்.

"மதுரைக் கலம்பகம்" என்றால் மதுரையிலுள்ள சுந்தரேஸ்வரருக்கு "வெண்பா, விருத்தம், ஆசிரியம்" முதலிய பல கலப்பின் செய்யுள்களை மாலையாகச் சூடுவது. அதாவது, ஒரு வித துதி நூலாகும். இத் துதி நூலாகிய கலம்பகமும், அந்தாதியுந் தானு ஒரு பெரிய விஷயத்தை ஸ்தாபிக்க மேற்கோள் நூலாகும். லெக்ஸிகான் கமிட்டியாரும் அதை ஒரு பெரிய நூலாக உலகத்தவர் எண்ண "பிர" என்னுஞ் சொல்லை வைத்து "பிரபந்தம்" எனக் கூறி உலகத்தை மருட்டப் பார்க்கிறார்கள். பிர பந்தம் என்றால் "பல கலப்புப் பாக்களின் தொடர்பு" அல்லது "பாமாலை" எனப் பொருள் கொள்ளுமே யன்றி, வேறு உயர்ந்த பொருளைத் தராது. ஆகவே பிரபந்தம் என்றால் மயங்க வேண்டியதில்லை. இனி அச் செய்யுளை வரைந்து அதன் தன்மையைத் தெரிவிப்பாம்.

குமரகுருபர சுவாமிகள் மதுரைக்
கலம் பகம், 24-வது
செய்யுள்.

கனி—தாழிசை.

கள்ளுண்டு களித்தவன்
கூறுவதாகக் கவிக் கூறல்.

"அழ குற்றதோர் மதுரேசனை யமரேச
னெனக் கொண்டாடுங் களியா
னின்றிசை பாடுங்களியேம்யாம்

பொழுதைக் கிருகல மூறு பைந் தேறற்
பனையினை நாம் போற்றிக் குரு
மூர்த்திக்கிணைசாற்றத்தகுமப்பா

பழுதற்றதோர் சான்றாண்மை பயின்றா
ரிதின் முயன்றார் பலமுண் டதி
னலமுண்டெவரறிவார் பலகலைநூ

லெழுதப்படுமேடுண்டது வீடுந்தாவற்று
லெழுதாததோர் திருமந்திர மிளம்
பாளையுளுண்டே"

இச் செய்யுள் "கள்ளுண்டு களித்தவன் கூறுவதாகக் கூறிய" செய்யுளாகும். கள் குடித்தவனுக்கு "ஆண்டிருந் தென்றம், சங்குவா யென்றந் தெரியாது" என்பர். அதற் கியையவே அப் பாடலின் தன்மையும், பொருளுமாகும். பொருளல்லாததைப் பொருளாகக் கொள்ளும் அதை மேற்கோளாக வெடுத்தல் தகுதியாகுமா?

இச் செய்யுள் சிலேடை செய்யுள். சிலேடை என்றால் இரு பொருள் விளங்கக் கூறுவது. அதுவும் இச் செய்யுளில் பின்னுள்ளதே சிலேடையாகும்.

(இ—ள்) "ஆடுங்களியால்—கள் குடித்து ஆடுங் களிப்பால், அழகுற்றதோர் மதுரேசனை—அழகு வாய்ந்த மதுரை நகரில் எழுந்தருளிய சிவனை, அமரேசனெனக் கொண்டு—இந்திர னெனக் கொண்டு, யாம்—கட் குடியராகிய நாம், இன்று—இப்பொழுது, இசை பாடுங் களியேம்—பாட்டுக் களிப்பை யுடையோம்" என்பதாம்.

இவ் விரண்டடியிலும் "குடியர்கள் சிவனை தேவேந்திரன்" எனக் கொண்டாடினார்களாம். சிவன் இந்திரனுக்கு மேல் எத்தனையோ மடங்கு உயர்ந்தவர். இது புராணக் கூற்று. அவரை குடியர்கள் இந்திரனாகப் பாவித்தது உயர்வு தாழ்வு அறியாமையே யாம். அது பார்ப்பானை பஞ்சம னெனக் கொண்டாடியது போல்தான். இந்திரன் சிவனைப்பூசிக்கப்பட்டவன். சிவன் இந்திரனுக்குக் கேட்ட வரத்தைக் கொடுப்பவர். அத்தகையோர் தன்மை யறியாது குடி வெறியால் உயர்ந்ததைத் தாழ்ந்ததாக மதித்தனர். இதைப் போல் "சான்றாண்மை" என்னும் உயர்ந்த பதத்தையும் "கள் தொழிலர்" எனக் குடியர் கூறலாம். அதைப் பிரமாணமாக வெடுத்தால் கமிட்டியாரது துவேஷத்தனமே யாகும். இச் செய்யுளின் ஆதாரவைக் கொண்டு "சிவன் இந்திரனாவான்" என்று தமிழ் லெக்ஸிகான்கமிட்டியார்லெக்ஸிகானில் கையாள முடியுமா? முடியாதபோது "கள் தொழிலர்" எனக் கூற எவ்விதம் முடியும்?

(இ—ள்) "அப்பா—அப்பா, பொழுதைக்கு—வேளைக்கு, இரு கலம் ஊறும்—இரண்டு கலம் உற்பத்தி யாகும், பைந்தேறல்—பசிய கள்ளை யுடைய, பனையினை—பனை மரத்தை, நாம்—குடியராகிய நாம், போற்றி—துதித்து, குரு மூர்த்திக்கு—குரு மூர்த்திக்கு, இணை சாற்றத்தகும்—ஒப்பாகச் சொல்லக் கூடும்" என்பதாம்.

இவ் விரண்டடியில் வரும் "அப்பா" என்பது குடியாது சாதாரண வழக்கச் சொல்லாகும். "வாப்பா, போப்பா, என்னப்பா" முதலியவை குடிகாரன் தண்ணீர்ப் பந்தலில் வழங்கக் காணலாம். இது குடியாது பாட்டானமையால் இப் பாஷையும் வழங்கப் பட்டது. பனை மரத்தைத் துதிக்கக் கூடிய வரும், உயர்த்திக் கூறக் கூடிய வரும் யாரா யிருக்கலாம்? குடியரன்றி வேறு யார் செய்வர்? இதற்குப் பின் னான் கடியும் சிலேடையாகும்.

### வெளிப்படைப் பொருள்.

(இ—ள்) "பழுதற்ற ஓர்—குற்ற மற்ற ஒப்பில்லாத, சான்றாண்மை பயின்றார்—கள் ளிறக்குந் தொழில் புரிபவர், இதில் முயன்றால்—பனை மரத்தில் முயற்சித்தால், பல முண்டு அதில் நல முண்டு—பய னுண்டு அதற்குமேற்பட்ட நன்மையு முண்டு, அறிவார் எவர்—இதனை குடியராகிய நம்மை யன்றி அறிபவர் யாவர், பல கலை நூல் எழுதப்படும் ஏடும் உண்டு—பல சாஸ்திரங்களையும் எழுத ஏடுகள் பனையிலுண்டு, அது வீடுந் தாவற்று—அவ் வேடுகள் வீடு மேயவும் வல்லது, எழுதாத ஓர் திரு மந்திரம் இளம் பாளையில் உண்டு—பனை மரத்தின் இளம் பாளையில் எழுதற் கியலாத ஒப்பற்ற திரு மந்திரம் உள்ளது" என்பது வெளிப்படையான பொருள்.

இதில் கூறிய "கள் ளிறக்குந் தொழில்" குற்ற மற்ற ஒப்பில்லாத தொழிலாகுமா? அப்படி ஒப்பில்லாத தொழிலெனக் கொண்டாடுபவர் கட் குடியரே யன்றி, வேறு யாவராவர்? மற்றையோர் "மருள் செய்கின்ற நறை வுண்ட வரை மண்டு கடல் போல், குருதிவாய் நரகினுய்த் திடுதி" எனவும், "மருள் கொடுக்கும் நறைவிற்கும் வணிகக் கபடனை, விரிவாந்து" எனவும் அதிவீரராம பாண்டியர் காசி காண்டத்தில் கூறியதைப் போல் கூறுவர். ஒப்பற்ற தொழி லென ஒப்பார். லெக்ஸிகான் கமிட்டியாருக்கு அது உயர்ந்த தொழில் போலும். அதனால் தான் அவர்கள் அத் தொழிலுக்கு உயர்ந்த பொருளைத் தரும் "சான்றாண்மை" யை சூட்டினர்கள். இது கலியுக மகிமையே!

### உட் பொருள்.

(இ—ள்) "இதில் பயின்றார்—குரு மூர்த்தியின் கண் பயில்வோர், பழுதற்றதோர் சான்றாண்மை முயன்றார்—குற்ற மற்ற ஒப்பில்லாத அறிவால் நிறைந்தோர், பலனுண்டு—குரு மூர்த்தியால் பெரும் பல னுண்டு, அதில் நலம் உண்டு—அப் பலத்தினு மேம்பட்ட நல முண்டு, அறிவார் எவர்—இதனை நம்மை யன்றி யறிவார் எவர், பல கலை நூல் எழுதப்படும் எடு உண்டு—குரு மூர்த்தியி னிடத்து பல சாஸ்திரங்கள் எழுதற்குரிய எடு உண்டு, அது வீடுந் தர வற்று—குரு மூர்த்தியி னிடத்துள்ள ஏடுகள் மோட்சத்தையும் தர வல்லது, எழுதாததோர் திரு மந்திரம் இளம்பாளையி லுண்டு—எழுதப் படாத மந்திரம் குரு மூர்த்தியிடத் துண்டு" என்பதாம். மேலே பனையை குரு மூர்த்திக்கு ஒப்பிட்டவர் இங்கு இளம் பாளையோடு சேர்த்து விட்டார். பெரு மயக்கம். கட் குடி மயக்கம் போன்றதே!

இச் செய்யுளிலுள்ள உட் பொருளும் வெளிப் பொருளும் அவ்வளவு சாமார்த்தியமாக விளங்க வில்லை. இரு பொருள் தராத "ஏடு, இளம் பாளை" முதலிய சொற்களும் வைக்கப்பட்டுள்ளன. அதனால் இச் செய்யுள் குடிகாரன் பாட்டாயினதே யன்றி, அவ்வளவு சிறந்த சிலேடைப் பாட்டாகாது. இதை ஒரு பொருளாக மதித்து நமது லெக்ஸிகான் கமிட்டியார்மேற்கோளாக வெடுத்ததும் அதிசயமே! இரண்டொரு சிலேடைப் பாட்டை இங் கறிவிப்பாம்.

நாணிக் கண் புதைத்தல் என்னும்
ஒரு துறைக் கோவை,
140-வது செய்யுள்.

"மஞ்சாங்கருதலர் போர்ப்படை மேற்
சண்ட மாருதம் போல்
விஞ்சாங்க மூலபல ரகுநாதன் வியன்
சிலம்பிற்
பஞ்சாங்க மோதி மறைகாட்டிச் சொர்
க்க மிப்பாற் படுத்தி
யஞ்சாங் குலத்தவர் பார்ப்பாரைச்
சேர்ந்த ததிசயமே"

(இ—ள்) "கருதலர்—பகைவரது, போர்ப்படையாம் — போர்ப்படையாகிய; மஞ்சு மேல்—மேகத்தின் மீது, சண்ட மாருதம் போல்—பெருங் காற்று போல, விஞ்சி—மிகுந்த, அங்கம்—படை வகுப்புகளோடு கூடிய, மூல பலம்—மூல பலத்தையுடைய, ரகுநாதன்—ரகுநாத சேதுபதியின், வியன் சிலம்பில்—பெரிய மலையின் மீது" என்னும் இம் முன்னிரண்டடி தளவாய் ரகுநாத சேதுபதியின் சிறப்பாகும். பின்னிரண்டடியே சிலேடை.

### வெளிப் பொருள்.

(இ—ள்) "பஞ்சாங்க மோதி—பஞ்சாங்கஞ் சொல்லி, மறை காட்டி—வேதத்தைத் தெரிவித்து, சொர்க்க மிப்பாற் படுத்தி—மோட்சத்தை வெளிப்படுத்தி, அஞ்சாங் குலத்தவர்—பஞ்சம குலத்தவர், பார்ப்பாரைச் சேர்ந்தது—பிராமணரைச் சேர்ந்தது, அதிசயம்—ஆச்சரியம்" என்பது வெளிப் பொருள்.

### உட் பொருள்.

(இ—ள்) "பஞ்ச அங்கம் ஓதி!—ஐவகை மயிர் முடியை யுடையவனே, மறை காட்டி—ரகஸிய ஸ்தானத்தைக் காட்டி (மறைத்தற் குரியது), சொர்க்கம்—தனத்தை, இப்பாற் படுத்தி—வெளிப்படுத்தி, அஞ்சு அங்குலத்தவர்—அஞ்சங்குல அளவினதாகிய கை, பார்ப்பாரைச் சேர்ந்தது—பார்க்கக் கூடிய கண்ணில் சேர்ந்தது, அதிசயம்—அதிசயம்" என்பது உட் பொருள். இச் சிலேடைப் பாவுக்கு முன், மதுரைக் கலம்பகத்தின் சிலேடை எம் மாத்திரம்! லெக்ஸிகான் கமிட்டியாரே தெரிந்து கொள்ளட்டும்.

நாணிக் கண் புதைத்தல் என்னும்
ஒரு துறைக் கோவை,
169-வது செய்யுள்.

"நிக்கிரக மேனைய நுக்கிரகமா மநு நீதி
புரி
யுக்கிரம காதனவாய் ரகுநாதன் வெற்
போதிமமே
சக்கிலியாயினர் பார்ப்பாருங் கைக்
கொள்ளச் சம்பந்தத்தா
லக்கிரம மென்று குயவரிதை வெளி
யர்க்கிதே"

(இ—ள்) "நிக்கிரகம்—நிக்கிரகத்தையும், ஏனை அநுக்கிரகம்—மற்றை அநுக்கிரகத்தையும், மா—பெருமை பொருந்திய, மநு நீதி புரி—மநு நீதியின் படியே செய்கின்ற, உக்கிரம்—கடுமையுள்ள, மகா தனவாய்—பெரிய தனவாயாகிய, ரகுநாதன்—ரகுநாத சேதுபதியின், வெற்பு—மலையிலுள்ள, ஓதிமமே—அன்னமே" என்னும் இம்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சரீ ... பத்த முத்தி
... நாம
சேது ... செல்விட
... செய்யுஞ்
சேரினை ... வெளினை மனத மிழ
நிலைக்கான தூரிய வாழ்வைந்
திகில் பமமாந் பொருளைத் திருவருளே
நிலைவாக்கி சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

விபவ ௵ ஆனி மீ ௰௨உ

---

## பத்து நாட்கள் தான் இருக்கின்றன.

நாடார் மகாஜன சங்கம் 12-வது மகாநாடு அருப்புக்கோட்டையில் கூடுவதற்கு இன்னும் பத்து நாட்கள் தான் இருக்கின்றன. இதற்குள் உபசரணைக்கமிட்டியார் செய்ய வேண்டிய பாக்கி வேலைகளை வெகு அவசரமாய்ச் செய்து கொண்டிருக்கின்றார்கள். கூடிய சிக்கிரம் எல்லா வேலைகளும் முடிந்து விடுமென்று நம்புகின்றோம்.

மகாநாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் பலரால் கொண்டுவரப்படுமென்று தெரியவருகிறது. ஏழை மாணவர்கள் சகாய நிதியை இனி யென்ன செய்வதென்பதைப் பற்றி பற்பல அபிப்பிராயங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஸைமன் கமிஷன் விஷயமாயும், தமிழ் நாட்டில் தற்பொழுது தெழும்பி யிருக்கும் பிராமணர், பிராமணரல்லாதார் பெரும் போரிலும் நாடார் குல மக்கள் பெரிதும் கவனம் செலுத்தி, அது சம்பந்தமாய்ப் பற்பல அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டும் வருகின்றன. எப் பிரசினையைப் பற்றி எவ்வெவ் அபிப்பிராயம் எழுந்த போதிலும் எல்லாவற்றையும் மகாநாடு சீர்தூக்கி நேர் வழியிற் றன் கடனாற்றுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆகையால் நாடார் குலத்தவர்களும், அபிமானிகளும் மகாநாட்டுக்குத் தவறாமல் விஜயம் செய்வார்களென்று நம்புகின்றோம்.

மகாநாடு சிறப்பாய் நடந்து வெற்றி பெறச் செய்ய வேண்டிய ஒத்தாசையளிப்பதாக உபசரணைக் கமிட்டியாருக்கு உறுதி கூறிய உத்தமர்கள் அனைவரும் இன்னும் பத்து நாட்கள் தானிருக்கின்றன வென்பதை எண்ணி முன்னதாக வந்து சேர்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகாநாட்டின் திறப்பாளராகிய கனம். டாக்டர். சுப்பராயன் அவர்கள் ஜூலை 4 உ முற் பகலிலேயே வந்து சேர்க்கூடுமென்று தெரியவருவதாலும், விமரிசையாக ஊர்வலம் நடத்துவதற்கு உபசரணைக் கமிட்டியார் ஒழுங்கு செய்து கொண்டிருப்பதாலும் எல்லோரும் 3 உ பிற் பகலில் இவண் விஜயம் செய்திருப்பது சிலாக்கியமா யிருக்குமென்று நம்புகின்றோம்.

---

## நாடார் தொண்டர் படை முதலாவது மகாநாடு,

### அருப்புக்கோட்டை.

நாடார் தொண்டர் படையின் முதலாவது மகாநாட்டை 6—7—28-ல் அருப்புக்கோட்டையில் நடத்தவேணுமென்றும், அதற்காக ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமிநாயக்கர் அவர்கள் அக்கிராசனம் வகிக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ள வேணுமென்றும் தீர்மானமாயிருக்கிற பிரகாரம் ஸ்ரீமான் நாயக்கர் அவர்களைச் சம்மதம் கொடுக்கும்படியெழுதி பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அன்னவர்களின் சம்மதம் தெரிந்து விளம்பரங்களும், அழைப்புப் பத்திரமும் அனுப்ப ஏற்பாடு நடந்து வருகிறது. நாடார்மகாஜன சங்கம் 12-வது மகாநாட்டின் உபசரணைக்கமிட்டியார்களை இம்மகாநாட்டிற்கும் உபசரணை புரியும்படியாய் தயவுடன் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். 5—7—28-ல் ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் அவர்களின் கீழ் கூடும் வாலிப நாடார் 2-வது மகாநாடும், 6–7–28-ல் நாடார் தொண்டர்படைமுதலாவது மகாநாடும் நாடார்மகாஜன சங்கம் 12-வது மகாநாடு நடைபெறும் தினங்கள் 3 லேயே நடைபெறுவதால், பிரதிநிதிகளுக்கு அதிக சிரமமின்றி மூன்று மகாநாடுகளையும் கண்ணியப்படுத்தச் சமயம் வாய்த்துளது. ஆனதால் நாடார் மகாஜனங்களை முன் பல கான்பரென்ஸ்களில் முதல் நாள் மட்டும் விஜயம் செய்து வேடிக்கையைப்போல் பார்த்துவிட்டு, மறுதினமே தங்கள் அவசர வேலை நிமித்தம் வெளியேறிவிடாமல், கான்பரென்ஸ் தினங்கள் மூன்றிலும் தவறாது விஜயம் செய்து அரிய தீர்மானங்களை நிறைவேற்றி நம் ஜன சமூக முன்னேற்ற விஷயமாய் ஏற்கனவே செய்துள்ள தீர்மானங்களையும் நடவடிக்கைக்குக் கொண்டுவந்து நடைபெறச்செய்ய முயற்சிக்கும்படியாய் வேண்டுகிறோம். கான்பரென்ஸின் திறப்பாளரான குமாரமங்கலம் ஜமீன்தாரும் சென்னை கவர்ன்மெண்டு முதல் மந்திரியுமான கனம். டாக்டர். பி. சுப்பராயன் யம். ஏ., பி. ஸி. யல்., யல். யல். டி. அவர்களின் அரிய உபதேசத்தையும், சங்கம் பிரசிடெண்டு ஸ்ரீமான் வெ. கனகசபை நாடார் அவர்களது உபன்யாசத்தையும், கவனமாய்க்கேட்டு ஆனந்தமடையும்படியாய் நம் குல கனவான்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். வாலிப நாடார்களது சமத்துவமடையும் முயற்சியிலீடுபட்டு அவர்களை ஆசீர்வதிப்பதுடன், சுயமரியாதையடையவும், மானிடர்க்கு உரிய சர்வ சுதந்திரமும் அடையவும் முயற்சிக்கும் "நாடார் தொண்டர்படை"யை ஆதரிக்கும்படியாயும், நம் ஜன சமூகத்தையும் மற்றும் சகோதர சமூகத்தவர்களையும் தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம். நாடார் தொண்டர் மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகிக்கும் கனவான் பெயரை பத்திரிகை மூலமாய் அறிவிக்கலாகுமென்று "நாடார் தொண்டர் படை" சேனாதிபதி ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமிநாடார் அறிவிக்கிறார்.

---

## ஓர் பகிரங்க கடிதம்.

நாடார் தொண்டர் படை சேனாதிபதி, ஸ்ரீமான் எஸ். கே. இராமசாமி நாடார் அவர்களுக்கு.

ஐயா!

நமது பாண்டித் தலப் புராதன ஆலயங்களில் நமக்குத் தடுக்கப்பட்டிருக்கும் "ஆலயப்பிரவேச" உரிமையைப் பெறுவான் வேண்டி சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கிறதற்குச் சேர்க்கப்படும் தொண்படையில் நம் குலத் தாய்மார்களாகிய பெண்மக்களும் சேருவதாகத் தோன்றுகிறது. அதிலும் பர்த்தாவை இழந்து பகவானைத் தோத்திரம் செய்து கொண்டிருக்கிறவர்களில் 35-வயதுக்குமேல் 50—வயது வரையுள்ளவர்கள் விசேஷ ஆதாவு காட்டுகிறார்கள்.

அவர்கள் சத்தியாக்கிரக பண்டுக்குத் தம்மாலியன்ற பண உதவி தருவதாகவும் பணம் இல்லாதவர்கள் நகைகளைத் தருவதாகவும் சீக்கிரம் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டியதற்குப் பிரயத்தனம் எடுக்க வேண்டுமென்றும், நாம் என்றைக் காகிலும் சாகிறதே உண்மை என்றும், அதற்குள் நம்மாலியன்றமட்டும் உயிர் போகும் வரை சத்தியாக்கிரக மாகிய சாத்வீகப் போராட்டம் கொள்ள வேண்டுமென்றும், நமது உரிமையைப் பெற நாம் பராமுகமா யிருப்பதால் உண்மையறியாத இதர வகுப்புச் சகோதரிகள் நம் வகுப்பினரைக் கோவிலுக்குள் வரக் கூடாதவர்கள் என்று சொல்வதைக்கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை என்றும் உன்னதமான அமைதி வார்த்தை சொல்லி ஊக்கம் காட்டுகிறார்கள்.

ஆகையால் பாரதமாதாவாகிய சமத்துவத் தாயார் சகல ஜனங்கள் இருதயத்திலும் தன் சக்தியைப் பரவச் செய்து வருகிற இச்சமயத்தில் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை நமது 12-வது கான்பரன்ஸிலும் வாலிபர் மகாநாட்டில் நம் வாலிப சகோதரர்களிடமும் நன்றாய் எடுத்துச்சொல்லி உன்னதமான தீர்மானங்கள் செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

மீ. சி. சுந்தரநாடார்,
போடிநாயக்கனூர்.

---

## ஜீவஹிம்சை நிவர்த்தி சங்கம், விருதுநகர்.

ஷை சங்கத்தின் முதலாவது கூட்டம் விபவ௵ ஆனி மீ 3உ ராவ்பகதூர் த. இரத்தினசாமிநாடார் ஞாபகார்த்த வாசகசாலையின் மேன்மாடியில் ஸ்ரீ திருவாலவாய் சுவாமிகள் தலைமையின் கீழ் நடந்தது.

அவ்வமயம் அன்பர்கள் பலர் அரிய சொற்பெருக்குகள் நிகழ்த்தினார்கள், அன்னோர், நாகரீகமடைந்ததாகக் கருதப்படும் இக்காலத்திலும் புலாலுண்போர் இருத்தல் வருந்தத்தக்கதென்றும், கேவலம் ஊனைப் பெருக்குதலின் பொருட்டு அநியாயமாய்ப் பிராணிகளை வதைத்துண்டல் அறவுங்கொடிதென்றும், புலாலுண்ணல் பொதுவாக மானிடர்க்கும் விசேஷமாக இந்திய மக்களுக்கும் இன்றியமையாத தல்லவென்றும், இன்னும் பல உண்மைகளையும் பல ஆதாரங்கள் காட்டிப்பேசினர்.

பின்னர் அக்கிராசனர், ஜீவஹிம்சையும், புலாலுண்ணலும் மிகக்கொடிதென்று கல்லுங்கரையும் வண்ணம் உபன்னியாசித்து, முடிவில் சிலபுலாலுண்வயது முதிர்ந்தோர்கள் (பொதுவாக நீடித்தபழக்கங்களை நீக்குதல் சிறிதுகஷ்டமாதலால்)தாங்கள்புலாலுண்டலை நிறுத்த முடியாவிட்டாலும் தங்களில்லங்களில்புலால்சமைத்தலைநிறுத்திவருங்கால இந்திய மக்களாய தங்கள் செல்வப் புதல்வ புதல்விகளையாவது இத்தீப் பழக்கம் பற்றாதவாறு தடுக்கவேண்டுமென்றும், புலாலுண்ணலைத் தவிர்த்தல் இந்திய ஜன சமூக சமத்துவத்திற்கோர் உறுதியானபடி யென்றுங்கூறி முடித்தார். பின்னர் வந்தனோபசாரத்தோடு கூட்டம் இனிது முடிந்ததென்று ஷை சங்கத்தார் எழுதுகிறார்கள்.

---

## ஆலயப் பிரவேசம்.

(ஸ்ரீ வ. தி. சங்கரலிங்கம்)

தற்சமயம் நமது ஜன சமூகத்திற்குள் ஆலயப் பிரவேசத்தைப் பற்றி பற்பல அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. நம் மித்திரனிலும் அநேக கட்டுரைகள் ஆதரித்தும் ஆக்ஷேபித்தும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இந் நிலையில் அதி தீவிர முன்னேற்றத்துடன் அருப்புக்கோட்டைநாடார்மஹாஜனங்களால்நடத்தப்படும்நமது12-வது மகாநாடு கூடுகிறது. ஆலயப் பிரவேசம் அதிக முக்கியமான விஷய மாகையால் அது பற்றி நமது மகா நாட்டில் அதிக விவாதம் நடைபெறுமென்பதில் சந்தேகமில்லை. சமூக சீர்திருத்தமான தீர்மானங்களும், சுயமரியாதைத் தீர்மானங்களும் ஏராளமாக வரும். இவ்வளவு முக்கியமான விஷயங்களைத் தீர்மானிக்க வேண்டியிருப்பதால் வெளியூர்களிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் விஜயமாவார்கள். குல முன்னேற்ற விஷயத்தில் அக்கரையுடையவர்கள் ஒவ்வொருவரும் மகாநாட்டிற்கு வந்து தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டு ஒரு முடிவிற்கு வர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். மகாநாடு முடிந்த பின்னர் செய்த தீர்மானங்களைப் பற்றிக் குறை கூறுவோர்களும் உண்டு. ஆனால் அவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. இது நிற்க,

ஆலயப் பிரவேசத்திற்காக சத்தியாக்கிரகம் செய்ய வேண்டியது அவசியந்தான். ஆனால் எம் முறையில் நடத்துவதென்பதைப் பற்றி இது வரையில் எவரும் வெளிப்படையாகக் கூறவில்லை. நாம் தனித்து நடத்துவதா, அல்லது ஆலய சுதந்திர மற்றவர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து நடத்துவதா என்னும் விஷயம் மிகவும் முக்கியமானது. நாம் தனித்து நின்று வெற்றி பெறுவது இயலாத காரியமாகும். துவேஷம் மிகுந்த தென்னாட்டில் சத்தியாக்கிரகம் செய்து வெற்றி பெறுவது இலேசான காரியமென் றெண்ணி விடலாகாது. பார்ப்பனர் ஒரு புறமும், பார்ப்பனரல்லாத கோடரிக் காம்புகள் மற்றொரு புறமும் சத்தியாக்கிரஹிகளைத் தாக்குவர். இரு தலைக் கொள்ளிக் கிடையில் அகப்பட்ட எறும்பைப் போல் நாம் தனித்து நின்று வெற்றி பெறுவது முடியாத காரியமாகும். சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் நம்மவர்கள் பிறரால் இம்சிக்கப் பட்டது ஒவ்வொருவரும் அறிந்த விஷயமே. நாம் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்து விட்டால் எதிரிகளின் சூழ்ச்சியால் நாட்டுப் புறங்களிலுள்ள நம்மவர்கள் அதிக கஷ்ட நஷ்டப் பட நேரிடும்.

அக் காலத்தில் சத்தியாக்கிரஹ இயக்கத் தலைவர்கள் சத்தியாக்கிரஹத்தைக் கவனிப்பதா, எதிரிகளின் ஆட்டூழியங்களை அடக்குவதா? இந் நிலையில் அக் காலத்தில் நம்மவர்கள் மிகுந்த கஷ்டப்பட நேரிடும். இதற் கெல்லாம் யார் ஜவாப் தாரியாவது? ஆகவே மற்ற சுதந்திர மற்ற ஜாதியார்களோடு சேர்ந்து நடத்தினால் ஒருவாறு நன்மை பயக்கும். தவிர தேசம் இப்போதிருக்கும் நிலைமையில் சத்தியாக்கிரகம் செய்தால் வெற்றி பெற முடியுமா வென்பதையும் கவனித்தல் வேண்டும். நம் தென்னாட்டு மக்கள் கொண்டுள்ள ஜாதிப் பயித்தியமும், உயர்வு, தாழ் வென்னும் அகங்காரமும், தீண்டாமையும் கெடுதலென்பதைப் பொது ஜனங்கள் இப்போது தான் உணர்ந்து வருகிறார்கள். சுமார் 4 அல்லது 5 வருடங்களுக்கு முன்னால் இருந்ததை விட இப்போது நம் நாட்டில் ஜாதி மத வேற்றுமைகள் அதிகம்ஒழிந்து கொண்டு வருவதை நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம். சுயமரியாதையின் உண்மைத் தத்துவத்தைப் பொது ஜனங்கள் நன் குணர்ந்து கொண்டார்கள். இன்னும் 4 அல்லது 5 வருடங்களுக்குள் ஜாதி அகங்கார மெனும் விஷப் பூண்டு அற வே யொ ழிந் து விடும். அக் காலத்தில் நாம் சத்தியாக்கிரகத்தை நடத்தினால் எளிதில் ஜெயம் பெறலாமென்ப துறுதி என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார் 12-வது மகாநாடு.

## "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்"

நம் சமூக முன்னேற்றத்தைக் குறித்துக் கொண்டு நம் முதியோரால நடத்தப்பட்டுவரும் நாடார் மகாஜன சங்கத்தின் 12-வது மகாநாடு வருகிற ஜூலை மீ 4, 5, 6 உ களில் அருப்புக்கோட்டையில் நடைபெறப் போவது எல்லோரும் உணர்ந்த விஷயம். மகாநாடானது மிகவும் அரசியல் சிக்கலான காலத்தில் கூடுகின்றது. இந்திய அரசாங்க நிர்வாகத்தில் ஓர் திடமான மாறுதலை அளிக்கக் கூடிய ஸைமன் கமிஷன் விசாரணைக் காலம் நெருங்குகிறது. அரசியல் தலைவர்கள் என்போர்களுக்கும் அரசாங்கத்தாருக்கும் இரகசிய-ராசிப் பேச்சுகள் நடைபெறுகின்றன. வடக்கே இந்து-முஸ்லீம் சமூகத்தினரும், தெற்கே கிறிஸ்தவர், பிராமணர், பிராமணர் அல்லாதார் ஆகிய சகலரும் தங்கள் உள்ளங்களைக் கமிஷன் பால் வார்த்து நிற்கின்றனர். பலர் தத்தம் யாதாஸ்துகளையும் அனுப்பிவிட்டனர். பகிஷ்காரக் கூச்சல் இட்ட கும்பலார் உள்பட பலர், பல காரணங்கள் புகன்று இங்கிலாந்து சென்று மறைமுகமாகத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துக் கொண்டும் வருகின்றனர்.

இந்நிலையில் அரசியல், சமுதாயத் துறைகளில், மமதை கொண்ட ஏனையோர்களால் ஒடுக்கப்பட்டிருக்கும் நாடார் சமூகத்தினர் என் செய்தல் வேண்டும்? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதன்றோ அறிவுடைமை? வெறும் வேதாந்தம் பேசி, விதைக்கின்ற காலங்களில் வீதி சுற்றித்திரிந்து விட்டு அறுவடை காலங்களில் அரிவாள் ஏந்தி நிற்பது எவ்வகையில் பயக்கும்? வஞ்சகர்களின் மாயவார்த்தைக்குட்படாது கருமத்தை நாடுவது நலன் நல்கும். வாளாக்கிடப்பின் பாழாய்ப் போவது ஒருதலை.

ஆகையால் நம் குலத்தோரைத் தாழ்மையாக நாங்கள் கேட்டுக் கொள்வது ஒன்றுண்டு. சீர்திருத்தம் வழங்கும் கமிஷன் முன் நம் குறைகளைத் திறனுடன் எடுத்துரைக்க அறிவாளிகளின் அபிப்பிராயங்களைத் திரட்டும் மார்க்கத்தை வருகிற மகாநாடு நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கிறது. இன்னவையன்ன அதிமுக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசிக்கவேண்டியிருப்பதால், அருப்புக்கோட்டை மகாநாட்டைச் சிறப்பிக்க வேண்டிய பொறுப்பு நாடார் மக்களுடைய தாகும். இலங்கை, பர்மா நாடார்களும் நம் அருமை "மித்திரன்" அதிபர் அவர்களின் வேண்டுகோளுக்குச் செவிமடுப்பார்கள் என நம்புகிறோம்.

நாடார் பரிபாலன சங்கத்தார்,
விருதுநகர்.

---

# வாலிப நாடார் 2 வது மகாநாடு.

## காரியதரிசிகள் அறிக்கை.

மகாநாட்டின் அழைப்புப் பத்திரங்கள் பல ஊர்களிலுமுள்ள வாலிபர்களுக்கு அனுப்பியிருக்கின்றோம். அவர்களிடமிருந்து உற்சாக மூட்டக்கூடியவும், தூண்டுதலானவும், விமரிசையோடுகூடியனவுமான கடிதங்கள் வந்து கொண்டிருப்பதைக்கருதுங்கால் வாலிபர்களுக்குள் புதிய உணர்ச்சி தோன்றியுள்ளதென்பது சந்தேகமற விளங்குகிறது. அரிய பெரிய தலைவர்களின் உபந்நியாசங்களைக்கேட்கவும் வாய்மொழிகளை ஏற்கவும் இதுவே தக்க தருணம். திரண்டுவாருங்கள்.

மகாநாட்டில் தீர்மானங்கள் கொண்டுவந்து நிறைவேற்றக் கருதும் அன்பர்கள் ஜூலை மீதம் முதல் தேதிக்குள் உபசரணைக்கமிட்டிக்கு தாங்கள் நிறைவேற்ற விரும்பும் தீர்மானங்களை தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

---

# நாடார் தொண்டர்படை சேனாதிபதி, ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமி நாடார் அவர்கள் கவனிக்கவேண்டும்.

நம்குல அரசர்களாகிய பாண்டிய மன்னர்கள் சுமார் 600 வருடங்களுக்கு முன் ஆண்டதற்கு மறுப்பு எழுதவோ, ஆலயப்பிரவேச பாத்தியதை நமக்கு வேண்டாம் என்று சொல்லவோ யான் வரவில்லை. நம்மேல் துவேஷ எண்ணமிருக்கும் இக்காலத்தில், நாம் ஆலயப்பிரவேசம் செய்தால் பின் முரண்படுவதாகவே முடியும் என்றே கூறுகின்றேன். கோவில் விஷயமாக கொழும்பில் சிங்களவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கலவரம் வரவில்லையா? அதில் 300 பேர் வரையும் மரணமடையவில்லையா?

நான் பிறந்ததிலிருந்து கோவில் உரிமை வேண்டுமென்றே யென்னுடைய அவா. ஆலயப்பிரவேச முயற்சி செய்வதைப்பற்றி எனக்கு ஆக்ஷேபமொன்றுமில்லை. ஆனால் தற்போதிய சாதி இறுமாப்பினர் துவேஷம் குறித்தும், சர்க்கார் மனப்போக்கை யுன்னியும் தான் என்மனம் பின்னடைகிறது. என்ன இடுக்கண் நேரினும் சகித்துக் கொள்ளலாம். ஆனால் கால நிலை காரிய சித்திக்கு ஒத்திருக்கிறதா வென்பதை மட்டும் கவனிக்கவேண்டும்.

ஆலயப் பகிஷ்காரத் தீர்மானத்தினால் மகாநாட்டுக்குப் பிரதிநிதிகள் குறைவுபட்டார்கள் என்பதல்ல. அக்குறைவுக்குக் காரணம் 'கள்' தீர்மானமேயாகும். ஆரம்பத்தில் இத்தீர்மானத்தில் கள் சம்பந்தமுடைய சிலர் வெறுப்புக்காட்டினுர்களெனினும், வரவர நியாயமறிந்து அத்தீர்மானத்திற்கிணங்க கள் சம்பந்தம் நீக்கிக்கொண்டு வருகிறார்களென்பது குறிப்பிடத்தக்கது.

தீவிர பக்குவமுடையவர்களைத் தொண்டர்படை அழைக்கிறதென்று எழுதப்பட்டிருக்கிறது. நம்மில் 13லக்ஷம் ஜனத்தொகை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஒரு லக்ஷம் பேருக்காவது இந்த உணர்ச்சியேற்பட்டிருக்குமோ இராதோ என்று சந்தேகமாயிருக்கிறது.

நம் பெரியார்கள் தேசப்பொதுவில் நன்மையைத்தான் உண்டுபண்ணி வைத்திருக்கிறார்கள். இந்து ஆலயம் இந்துக்கள் யாவருக்கும் சொந்தம் என்று சட்டம் செய்துவிட்டால் சத்தியாக்கிரகமென்றும், தொண்டர்படையென்றும் பேசவே வேண்டியதில்லை சட்டம் பிறக்கும் நாள் எந்நாளோ! யாம் வாளாவிருந்தால் சட்டம் எப்படிப் பிறக்கும்? என்ற வினவெழலாம். முயற்சி செய்ய வேண்டியது தான். ஆனால் யாம் மட்டும் தனித்து நின்று வெற்றிபெற்று விடுவோம் என்பதுறுதியில்லை. ஆலய சுதந்திரமற்ற ஏனைய வகுப்பினரும் சேர்த்து கொண்டால் நலமாயிருக்கும். அவ்வகை ஒத்துழைப்புக்குக் காலநிலை பக்குவமாயிருத்தல்வேண்டும். பக்குவமான காலத்திற்கு இன்னும் சிறிது காலம் எதிர்பார்க்க வேண்டியதிருக்கிறதென்பதே என் கருத்து. காலம் அறிந்து செய்யின் ஞாலமும் கைக்கொள்ளலாம் என முடிக்கிறேன். இதை இளைஞர் மகாநாடும் ஆழ்ந்து யோசிக்குமாக.

ஆ. ராமசாமிநாடார்,
கழுகுமலை.

---

**நாடார் மகாஜனங்களே! நமது மகாநாட்டுக்கு ஏராளமாய் விஜயஞ் செய்து சிறப்புறச் செய்யுங்கள்.**

---

# செய்தித் திரட்டு.

திருச்சினாப்பள்ளி மலைக் கோயிலுக்குள் பிரவேசிக்க ஏற்பாடுகள் செய்துவரும் ஸ்ரீமான்களான ஜே. என். ராமநாதன், சின்னப்பர், தண்டபாணி பிள்ளை முதலியவர்களுக்கு 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இவ் வுத்தரவை நீக்கி விடவிண்ணப்பித்திருக்கிறார்கள்.

*　　*

ஐக்கிய மாகாணக் கவர்னர் மேன்மை தங்கிய ஸர். அலக்ஸாண்டர் முட்டிமன் நைனிடாலில் திடீரென மார்படைப்பினால் மரணமாயினர். எங்கும் துக்கமயமாயிருக்கிறது.

*　　*

தஞ்சை ஜில்லா திருநள்ளாற்றில் ஒரு குரங்கு தன் குட்டியைக் காணமல் மாணிட உணர்ச்சிகொண்டு துக்கப்பட்டுக் கண்ணீர் வடித்துத் தேடித் தேடி அலைகின்றது. அது முனிஸிபல் ஆபீசுக்குச் சென்று தலைவர் வெளியில் வந்தபோது அலறி அழுது முறையிட்டுக்கொண்டது. அதன் மேல் குட்டியைத் தேடும்படி ஒரு கூட்டத்தாரைத் தலைவர் அனுப்பினர்.

*　　*

அமெரிக்கா—நியுயார்க்கில் ரெமிங்டன் ஆர்ம்ஸ் கம்பெனியார் மனிதன் போலவே பேசவும், வருகிறவர்களுக்குச் சரக்கு விற்கவும், சில வார்த்தைகள் பேசவும் கூடிய ஒரு யந்திரத்தை உற்பத்தி செய்து வருகின்றனர். இம்மாதிரி யந்திரமனிதர்கள் ஏராளமாய்ச் செய்வதற்கு 2½ கோடி டாலர் மூலதனத்துடன் ஒரு கம்பெனி ஆரம்பிக்கப்போகிறார்கள்.

*　　*

காவிரி ஆற்றின் கற்பாலம் திடீரென்று உடைந்துவிட்டது. இதனால் வண்டிப்போக்கு வரத்துத் தடையேற்பட்டிருக்கிறது.

*　　*

கேம்பிரிட்ஜ் யுனிவர் ஸிட்டி கணக்குப் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறின 16 பேர்களுள் ஸ்ரீ வி. ராமசாமி எனும் ஒரு இந்தியருமாவர்.

*　　*

திருவனந்தபுரத்தில் இந்துக்கள் ஸ்நானம் செய்வதற்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஹில்பர்ட் என்னும் ஐரோப்பியர் ஒருவர் அசுத்தம் பண்ணி விட்டாரென அவரை அடித்து விட்டதாக அவர் வழக்குத் தொடுத்திருக்கிறார்.

*　　*

பாரஸீக சர்க்கார் உத்தியோகத்திலிருக்கும் பண்டைய சரித்திர ஆராய்ச்சியாளர் பண்டிதர் ஹர்ட்ஸ் பெல்ட் என்பார் மெஷ்டிமார்காப் என்ற விடத்திற்கருகில் ஓர் இடத்தில் பூமியைத் தோண்டும்படி ஏற்பாடு செய்தபோது கீழே ஓர் மாளிகை இருக்கக்கண்டார். ஆங்கிருந்த மேல் பாகத்தை எடுத்துவிட்டார். ஆங்கிருந்து எடுக்கப்பட்ட ஓர் கல்லில் "ஸைரஸ்கிங்ரேட்" என்று லத்தீன் பாஷையில் எழுப்பட்டிருந்து. மற்றும ஆங்குள்ள வற்றைத் தோண்டி யெடுக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

*　　*

கல்கத்தாவினருகில் பட்ஜ் பட்ஜ் என்னுமிடத்தில் ஒரு வீட்டில் சில கொள்ளைக்காரர்கள் புகுந்து அங்குள்ள ஸ்திரீயை அவ்வீட்டு இரும்புப்பெட்டிச் சாவியைக் கொடுக்கும்படி மிரட்டினுர்கள். அவள் மறுத்து அவர்களுடன் நெடுநேரம் சமராடி இறுதியில் அவர்களால் குத்துப்பட்டு வீழ்ந்தாள். அவள் வீழ்தலும், கொள்ளைக்காரர்கள் பெட்டியிலுள்ள நகைகளும், ரொக்கமுமாக ரூ 11000—0—0 கொள்ளை கொண்டோடினர்.

*　　*

கொளும்புக்கு 170 மைல் தூரத்தில் இரண்டு கப்பல்கள் மோதுண்டு பலர் மூழ்கினர். சிலர் காப்பாற்றப்பட்டனர்.

*　　*

கோயம்புத்தூரில் ஆதித்திராவிட மக்களுக்கு ஒரு போஜன விடுதி கட்டும் பொருட்டு ஸ்ரீ வெரிவாட்செட்டியார் ரூ 1500—0—0 நன்கொடை யளித்திருக்கிறார். ஷை கட்டடம் கட்டுவதற்கு நிலம் வாங்க நகரசபை சங்கத்தார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்.

*　　*

106-வயதுள்ள அமெரிக்க சுதேசியொருவர் அமெரிக்க சுதேசிகளின் பழக்க வழக்கங்களைக் குறித்து ஐரோப்பாவிலுள்ள முக்கிய நகர்களில் சென்று பிரசங்கம் செய்வார். இவர் நீலேஜ் சாதியாரின் தலைவர். இவர் தந்தை 147-வயது வரையும், தாயார் 137-வயது வரையும் இருந்தவர்கள்.

*　　*

ஸியாலன் பனிக்கட்டி நதியையும், இமயமலையில் சில பிரதேசங்களையும் கண்டு பிடித்த ஸ்ரீ டி. ஜி. லாங்ஸ்டாப் என்பவருக்கும், துருவப் பிரதேசங்களில் செய்த வேலைக்காக ஸர். ஹர்பர்ட்வில்கின்ஸ் என்பவருக்கும் ராயல் பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன.

*　　*

கிரேட் பிரிட்டனில் பிரமாண்டமான ஆகாய விமானம் கட்டப்பட்டு வருகிறது. அடுத்தமாதம் பூர்த்தியாகும். அது 50 லக்ஷம் சதுர அடி கொண்டது. 100 பிரயாணிகள் உட்காரக்கூடும். பரிசோதனையின் பின்னர் இங்கிலாந்திற்கும் கனடாவிற்கும் பறக்க விடுவார்கள்.

*　　*

உதகமண்டலத்தில் திருவாங்கூர் இளைய மகாராணியின் அந்தரங்க காரியதரிசி தங்கியிருக்கும் "செல்சோ" என்ற பங்களாவில் சில திருடர்கள் புகுந்து நகைகளும், ரொக்கமுமாக ரூ 50000—0—0 திருடிவிட்டார்கள். நகையும், பணமிருந்த 2 பெட்டிகள் ரஸ்தா ஓரத்தில் கிடந்தது. போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

*　　*

உலக சமாதானத்திற்காக முயற்சித்து வரும் ஸ்ரீ கெல்லாத்திற்கு இந்த வருஷ "நோபிள் பரிசு" கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஷை பரிசை அளிக்கும் அதிகாரம் நார்வேஜிய சர்க்காரைச் சேர்ந்தது.

*　　*

பரத்துவானிலுள்ள ஒரு ஏரியின் கரை உடைந்து வெள்ளப்பெருக்கேற்பட்டு 50 கிராமங்களுக்கு நஷ்டமேற்பட்டிருக்கிறது. ஆயிரம் பேர்கள் வரை வீடின்றித் தவிக்கின்றனர்.

*　　*

சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டம் செப்டம்பர் மீ 3 உயிலிருந்து ஆரம்பமாகும்.

*　　*

அலி சகோதரர்களின் தமக்கை பீகம் பூசப்அலி ராம்பூரில் காலகதியாயினர். தமைக்கையின் பிணத்தையாவது சென்று பார்க்க வேண்டுமென்று ராம்பூர் நவாப்பை ஷவுக்கத்அலி அனுமதி கேட்டார். மகமதலி ஐரோப்பாவுக்குப் போயிருக்கிறார்.

*　　*

திருச்சினுப்பள்ளியில் வேணு கோபால் நாயுடு என்பவர் குடிவெறியில் தண்ணீரென்று அக்கினித்திராவகத்தைச் சாப்பிட்டு உயிர் துறந்தார்.

*　　*

காராச்சியில் ஒரு முஸ்லீம் வாலிபன் நகைகளுக்கு ஆசைப்பட்டு தனது சகோதரியின் 9-வயதுள்ள புத்திரியை தனது ஸைக்கிளில் ஏற்றிக் காட்டுக்குக் கொண்டுபோய் கழுத்தைத் திருகிக்கொன்று போட்டான்.

*　　*

புனாவில் சிவாஜி மன்னரின் உருவச்சிலை நாட்டப்பட்டிருக்கிறது. இது வெண் கலத்தாலானது. 10 டன் நிறையுள்ளது இவ்வளவு பெரிய சிலை இந்தியாவில் வேறு கிடையாது. சிவாஜி பவானி தேவியிடம் வாள் வாங்கும் பாவனையில் செய்யப்பட்டிருக்கிறது. இந்துக்களும், முகமதியர்களும் பொருளுதவி செய்திருக்கின்றனர்.

*　　*

லண்டன் பட்டணத்தில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச ஐயங்கார் முயற்சியில் ஒரு காங்கிரஸ் சபை ஏற்படப் போகிறது. சக்லத்வாலாவை யொட்டி 60 பேர் சேர்ந்திருக்கின்றனர்.

*　　*

நார்வே தேசத்தில் ஆஸ்பிலோநகரில் முற்றும் மரத்தினுற் கட்டப்பட்ட ஒரு கிறிஸ்தவ தேவாலயம் இருக்கின்றது. இதில் ஓர் இரும்பு ஆணியேனும் அடிக்கப்படவில்லை. கட்டி 800 வருஷங்களாகியும் நல்ல நிலைமையில் உள்ள இந்த ஆலயம் உலகத்தின் கண்ணுள்ள அதிசயங்களில் ஒன்ருகக் கருதுகிறார்கள்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பெண்களுக்கான போதம்.

நம் தாய் நாடாம் இந்திய நாடு மேனாட்டு நவீன நாகரிகத்திலே வர வரச் சீர் குன்றுகிறது—மகிமை மறைகிறது. இதை நிவர்த்திப்பதற்குக் கற்றறிந்த ஆண் மக்கள் பல துறைகளிலும் பாடுபட்டு வருகிறார்கள். அவர்கள் எத்தனை பாடுபட்டாலும் அது பலிதமாதற்குப் பெரிதும் துணை புரிய வல்லார் பெண் மக்களே யாவர். ஒரு குலமோ தேசமோ சீர் பெற்றிலங்குதற்கு முக்கியமாய் அதற்கு கொண்ட பெண் மக்களே இலக்கா யிருத்தல் அவசியம். ஆக்கலும் அழித்தலும் பெண்களின் மாட்டே செருகி யிருக்கிறது. அவர்கள் சீர்திருந்தின் அவர்களுறை நாடும் சீர்திருந்த முற்றதேயாம். எனவே, தம் நன்மை கருதியும் அதன் பயனாய் குலம், தேசம் நன்மை விளைவு கருதியும் பெண் மக்கள் கல்வி வளர்ச்சி யடைந்து ஆன்றோர்கள் கூறிப் போந்த நியாய வழி பிறம்பாது வாழ்க்கை நடாத்த ஆவலிக்கிறோம்.

பெண்களுக்குரிய நீதி நெறிகள் யாவை வகுக்கப்பட்டுள்ளன? அவை கற்பு, தெய்வ பக்தி, குடும்பப் பற்று, குழந்தைப் பாதுகாப்பு முதலியவை பற்றியனவாகும். கற்பு என்பது தான் பெண்களுக்கு முக்கிய பூஷணமாகும். இதைக் கைக் கொண்டு நிதன் குறிகளாய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நால் வகைக் குணங்களொளிர நடை கொளல் வேண்டும். இந் நால் வகைக் குணங்கள் குடி கொண்ட மாதே பதிவிரதை யெனப் பரிமளிக்கிறாள். பதிவிரதையின் பெருமையைப் பகரவும் வேண்டுமா? சுருங்கக் கூறுதாம். அவள் தெய்வீகத் தீக்ஷண்யம் பெற்றவளாகிறாள்.

கற்பின் விலக்ஷணத்தால் கணவனே கடவுள் என வழிபட்டு வருதலோடு தெய்வ பக்தியும் இருந்து வர வேண்டும். ஆலயத் தொழவும், பக்தி பரவசப் பாடல்கள், கால க்ஷேபங்கள் முதலியவை செவி மடுத்து இறைவனைத் திருவுள்ளத்தே பதித்தல் வேண்டும். இதனால் தெய்வ கடாக்ஷம் பெறுதல் சாதனமாம். குடும்பத்தில் பல பேர். கணவன் மாட்டு மட்டும் வாஞ்சை கொண்டிருத்தல் போதுமானதல்ல. மற்றையரிடமும் அன்பு நிகழ்தலுடன் சுமுகமான நடையிற் பழகி அவர்களின் அன்பையும், ஆசீர்வாதத்தையும் கொள்ளை கொள்ள வேண்டும். அப்போது தான் சற் புத்திரி யாகிறாள்.

குழந்தைகளைப் பாது காப்பதில் பெண்களின் பெருங் கவலை தேவையாகிறது. பிள்ளைகள் பிற் கால வாழ்வின் பெருமையும், சிறுமையும் பெண்கள் கையிலேயே உண்டு. பிள்ளைகள் அறிவு மலிந்தவர்களாயும், வீரம் பொலிந்தவர்களாயும் ஆவது தாய்மார்களின் போஷணையைப் பொறுத்திருக்கிறது. கவனிப்பில்லாத வளர்ப்புக் கொண்ட பிள்ளைகள் இகழுரைக் குரியவர்களே யாவர். இத் தோஷத்திற்காளாகாமல் பெண்கள் புகழுரைக் குரியராம் வண்ணம் பிள்ளைகளைத் தகுந்த முறையில் வளர்த்துப் பழக்கல் வேண்டும். இவர்கள் போடும் அஸ்திவாரத்தில் தான் பிள்ளைக் கோட்டை வளர வேண்டுமென்னும் தத்துவம் பெண்கள் மனதில் நிலைபெற்றிருக்குமாக.

மேற் கூறியன போன்ற சகல வழிகளிலும் பெண்கள் தம் கடமை யோர்ந்து நடை கொள்ளின் நம் நாடு பொலிவுறும். இவ் வழிகளை யவர்கள் கடைப் பிடிக்க அத்தியாவசியமாயுள்ளது கல்வியே யாகும். கல்வியை அவர்கள் ஆவலுடன் பெற முயல வேண்டும். அவர்கள் முயற்சிக் கனுகூலமாய் ஆண்கள் ஒருப்பட வேண்டும். பெண்களுக்குக் கல்வி பயப்பதில் ஆண்கள் சிரத்தை வேண்டும். அவர்களுக்குக் கல்வி தருவது நாட்டை மேம்பாடுறச் செய்வதேயாகும்.

ஆகையால் ஆணினம் பெண் கல்வியில் பெருங் கவலை யெடுக்குமாக. பெண்கள் தம் நன்மை கருதியும், ஆண்களுக்குறு துணையா யிருக்கவும், நாடு நலம் பெறவும் கல்வி கற்று, கற்போம்பி, குடும்பத்தைப் பெருமைபட நடத்தி, குழந்தை வளர்ப்பில் அதி சிரத்தை காட்டி வாழ்க்கையை இனிது நடாத்தி வருவார்களாகவும்.

பி. எஸ். குப்புசாமி நாடார்,
பள்ளபாளையம்.

## கல்வியின் மகத்துவம்.

உலகின் கண் உள்ள ஆன்மகோடிகளத்தனையிலும் மேம்பட்ட ஜென்மம் மானிட ஜென்மமே என்பது மறுக்கொண்ணா உண்மையாகும். இத்தகைய சிறப்புவாய்ந்த பிறப்பிற் புகுந்து மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் அப்பிறப்பின் பெருமைக்கேற்றவாறு ஞான நூல்களைக் கற்றலும், கேட்டலும், அவற்றிற்கூறிய படி நல்லொழுக்கமுடையவரா யிருத்தலுமேற்பட்டால்தான் அப்பிறவியினால் பெறக்கூடிய பயனைப் பெறலாமென்பது துணிபு. கல்வி கேள்வியொழுக்கங்கள் மனிதப் பிறவி எடுத்தார்க்கு இன்றியமையாதனவா யிருக்கின்றன. மேற்கூறிய ஒழுக்கங்கள் இல்லாவிடின், மனிதப் பிறவியிற் பிறந்தும் பயனில்லை என்று கொள்க. இது அடியில் வரும் செய்யுளால் காணக்கிடக்கிறது.

எப்பிறப்பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப் [பிறப்பில்
கற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்ட [தன் கண்
நிற்றலும் கூடப்பெறின்.

கல்வியின் பெருமைசொல்லுக்கடங்காததா யிருக்கிறது. சூரியப் பிரகாசத்திற்கும் அந்தகாரத்திற்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு பேதம் கல்விப் பொருளுடையாருக்கும் அஃதில்லாருக்குமிருக்கிறது. "எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும், அக் குடிக்கற்றோரை மேல்வருகென்பர்" என்பது ஒளவையார்கூற்று. இதை நாம் நாடோடிய பாவனையில் கண்கூடாகக் கண்டுவருகிறோம்.

கல்விச்சாதனம் கொண்டே கடவுளை யறியலாம். பக்தி பரவசித்து அவர் பாதமடையலாம். மனிதனுக்கேற்ற நான்கு புருஷார்த்தங்களையும் கல்வியே யளிக்கிறதெனின் பின் அக் கல்வியின் பெருமை தானென்னே! இதை அடியில் வரும் செய்யுளில் காண்க.

அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு—நாட்டும் [உறுங்கவலொன்
றுற்றுழியுங்கைகொடுக்கும் கல்வியினூங் [கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை.

படித்தவன் உலகத்தில் பல் வேறு இடங்களில் நடக்கின்ற எல்லாவிஷயங்களையும் அப்போதைக் கப்போது தானே நேரிற் கண்டறிந்தவன்போல் பல பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்து கொள்கிறான். ஆனால் படியாதவனோ சஞ்சாரப் பிரேதம்போல் காதிருந்தும் கேளாதவனாகவும், கண்ணிருந்தும் காணாதவனாகவும், மன திருந்தும் நினையாதவனாகவுமிருக்கிறான்.

இங்கிலாந்து பிரான்சு முதலான தேசங்களிலுள்ள நாகரீகமும், செல்வமும், அபூர்வமான வேலைகளும் அத் தேசத்தாருடைய கல்வித்திறமையாலடைந்த பேறுகளேயாகும். தற்பொழுது சமுத்திர ஜலத்தைக் கிணறு விழுங்கியது போல் இந்த இந்தியா தேசத்திலுள்ள கோடானுகோடி ஜனங்களை சில இங்கிலீஷ்காரர்கள் ஆள்வது கல்வியின் பலத்தாலல்லாமல் சரீர பலத்தினாலல்லவேயல்ல.

உலகம் உண்டானது முதல் இது காலவரையும் இறந்து போனவர்களின் தொகை சொல்லக்கூடுமா? அவர்களுடைய பெயர்களெல்லாம் நீரில் எழுதிய எழுத்தைப்போலாயின. ஆனால் கல்விமான்களுடைய பெயர்களும், அவர்களுடைய கல்வித்திறமையும் என்றுமழியாததாய் தழைத்தோங்கி நிற்கின்றன. கல்விச் சக்கரவர்த்தியாகிய கம்பரும், தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனாரும், இன்னும் இத்தகைய வித்வ சிரோமணிகளும் நமக்குக் கல்வியின் மகத்துவத்தை நன்குணர்த்தினவர்களாய் நம் முன் நிற்கின்றார்கள்.

எப்படி ஓர் மாலுமியானவன் கொந்தளிப்பான ஓர் பெரிய சமுத்திரத்தில் கப்பலை ஓட்டிக்கொண்டு, திசை தவறி ஆபத்துக்குள்ளாகாவண்ணம்

(3-ம் பக்கத்தின் தொடர்பு.)

முன் னிரண்டடி தளவாய் ரகுநாத சேதுபதியின் சிறப்பாகும். பின் னிரண்டடியே சிலேடை.

### வெளிப் பொருள்.

(இ—ள்) "கைக் கொள்ளச் சம்பந்தத்தால்—கைக் கொண்ட சம்பந்தத்தால், பார்ப்பாருஞ் சக்கிலியாயினர்—பிராமணருஞ் சக்கிலியாயினர், குயவர்—குசவர், அக்கிரமம் என்று—முறை தவறென்று, இதை வெளியாக்கினர்—இவ் விஷயத்தை வெளிப்படுத்தினர்" என்பது வெளிப் பொருள்.

### உட் பொருள்.

(இ—ள்) "கைக் கொள்ளச் சம்பந்தத்தால்—கை மேற் கொண்ட சம்பந்தத்தால், அதாவது, கை கண்ணை மூடியதால், பார்ப்பாரும்—நேத்திர முடையவரும், பார்க்கப்பட்டவரும், சக்கு—கண், இலியாயினர்—இல்லாதவராயினர், இதை அக்கிரம மென்று—இது குற்ற மென்று, குயம்—தனம், வெளியாக்கினது—வெளிப்பட்டது" என்பது உட் பொருள்.

ஒரு துறைக் கோவையிலுள்ள பின்னிரண்டடிகளெல்லாம் சிலேடையாகும். சிலேடைகள் வெளிப் பொருளையும், உட் பொருளையும் பயக்கும். வெளிப் பொருள் வேடிக்கை அர்த்தத்தையும், உட் பொருள் நேர் அர்த்தத்தையும் விளக்கும். இவற்றுள் வேடிக்கை அர்த்தத்தை அறிவாளிகள் எவரும் பொருள் படக் கொள்ளார். பொருள் படக் கொள்ளின் மேற் கூறிய கோவைச் செய்யுள்களை யனுசரித்து "பார்ப்பார், சக்கிலியர், பஞ்சமர்" ஆகிய மூக் குலத்தவரையும் ஏக குலத்தவரெனச் சொல்ல வேண்டி வரும். இது போல் மதுரைக் கலம்பகத்துள்ள "சான்றாண்மை" என்னுஞ் செய்யுளுமாகும். அதில் வேடிக்கைப் பொருள் கள் தொழிலும், உட் பொருள் அறிவுடைமையுமாகும். வேடிக்கைப் பொருளைக் கொள்பவர் கட் குடியரும், உட் பொருளைக் கொள்ளுபவர் அறிவாளியுமாவர். இது பன்னூற் துணிபு. விரிவஞ்சி விடுத்தாம்.

ஆகவே "சான்றாண்மை" என்பதற்கு "கள் தொழிலர்" என விளக்கியது தவறெனவும், அதை அகராதியிலிருந்து எடுத்து விட வேண்டுமெனவும் "தமிழ் லெக்ஸிகான்" கமிட்டியாரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

"சாறு—ஆண்மை" என்னும் இரு பதங்களும் ஒன்று சேரின் "சாற்றாண்மை" எனப்படுமே யன்றி, "சான்றாண்மை" எனப்படாது. "சாறு—ஆர்—சாற்றார், வாறு—ஆர்—வாற்றார், நீறு—ஆர்—நீற்றார்" எனப்படுமே யன்றி, சான்றார், வான்றார், நீன்றார் எனப்படாது. அப்படிக் கூற விதியுமிடையாதென வறியவும்.

சான்றாண்மை என்பதற்கு ஏற்றிய பொருளை யனுசரித்து, "சாணாக் கத்தி, சாணா மூர்க்கன், சாணான்" என்பவைகட்கும் கள் தொழிலை தக்கெழுதியுள்ளார்கள். சாணான் என்பதில் கள் சப்தம் விளங்க நூற் பிரமாணம் காட்ட லெக்ஸிகான் கமிட்டியாரைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஆகவே இவைகளையுந் தகுந்த மாதிரியாக அழித்து எழுதக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

த. விஜயதுரைச்சாமி கிராமணி,
"க்ஷத்திரிய மித்திரன்"
பத்திராதிபர், சென்னை.

---

எவ்வளவு ஆவலோடு கடற்கரை விளக்கங்களாகிய தீபஸ் தம்பங்களை உற்றுநோக்கினவனாக விருக்கின்றானோ, அவ்விதமே நாமும், மேற்கூறிய மாலுமிக்குத் திசை தவறாவண்ணம் வழிகாட்டுகின்ற தீபஸ்தம்பத்தைப் போலொத்த ஞானப்பிரகாசப் பெரியார்களின் வழிபற்றி, அவர் காட்டும் கல்வி ஒளியால் இன்படைந்து பிறவிக் கடற் பிரயாணஞ் செய்து இறுதியில் க்ஷேமமடையும் பயனைப் பெற்றுய்ய வேண்டுமென்பதே இதன் கருத்து. விரிவஞ்சி சுருக்கப் பட்டது. சுபம்!

ஏ. வி. தவசிப்பெருமாள் நாடார்,
மணக்காடு.

## போர்டு மோட்டார்.

### ஒன்றரைக் கோடி விற்பனை.

### கலியுகக் குபேரரின் தொழிற்சாலை.

ஹென்றி போர்டு புதிய மாதிரி மோட்டார் ஒன்றைச் செய்து உலகிற்கு அளித்திருக்கிறார். வெகு நாட்களாய் இந்த மாதிரி புதிய போர்டு மாடல் ஒன்று வரப்போகிறதென்று வதந்தியிருந்து வந்தது. ஆனால் ஹென்றி போர்டே ஒரு அறிக்கை இதைக் குறித்து வெளியிடுவதற்கு முன் அவர் அதைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேச வில்லை. இப்பொழுது வந்திருக்கிற மாதிரி பழைய "டி" மாடல் வண்டியை விட எவ்வளவோ வகையில் புதிதாய் எல்லாம் அமைக்கப்பட்டு அபிவிருத்தியான வகையிலிருக்கிறது. முதன் முதலில ஹென்றி போர்டு செய்த மோட்டார் வண்டி சாதாரண ஜனங்கள் கூட எளிதாக வாங்கக் கூடும்படி அவ்வளவு மலிவாக இருந்தது. இதனால் தான் அவருக்கு அவ்வளவு பெரிய கீர்த்தி கிடைத்தது. புதிதாக இப்பொழுது செய்திருக்கிற மாதிரியும் இதே மாதிரி பொது ஜனங்கள் ஆதரித்து போர்டு கம்பெனியின் பேரை நிலை நாட்டத் தகுந்தவாறே இருக்கும் என்று தோன்றுகிறது.

போர்டு மோட்டார் 25 வருஷ காலமாய்ப் பிரபலமாகி உலகில் இதுவரையில் 1½ கோடி வண்டிகள் வியாபாரமாயிருக்கின்றன. இவ்வளவு மோட்டார் வண்டிகள் விற்ற ஒரு நிலையத்தை திடீரென்று புதிய மாதிரியாக வண்டியை மாற்றி யமைப்பதென்றால், அதனால் கம்பெனி வேலையிலேயே எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று சாதாரணமாய் யாரும் ஊகித்தறியலாம். "டி" மாடல் மோட்டாரையே எப்படியெல்லாம் அபிவிருத்தி செய்ய முடியும் என்றே, முதலிலிருந்து போர்டு கம்பெனியார் யோசித்து வந்திருக்கின்றார்கள். இவ்வாறு எப்பொழுதும் அபிவிருத்தி செய்வதே கவலை கொண்டு போர்டு உழைத்ததால் தான் மிகக் குறைந்த விலைக்கு மோட்டார் சாதாரண ஜனங்கள் கூட வாங்கக் கூடியவாறு செய்ய முடிந்தது. அனேக ஆயிரம் வண்டிகள் சேர்ந்தாற் போல் ஒரே யடியாய் செய்யப் படுகின்றன. அதனால் விலையும் மலிவா யிருக்கிறது.

1902-ம் ஆண்டில் ஒரு சிறிய குடிசையில் தான் முதன் முதல் போர்டு கம்பெனி அமைக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது கம்பெனியின் விஸ்தீரணம் பல சதுர மைல்கள் அடங்கியதா யிருக்கிறது. பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் அதன் தொழிற்சாலைகளில் உழைக்கிறார்கள். இந்த தொழிற்சாலைகள் "டி" மாடல் வண்டியைச் செய்வதற்கேற்றவாறே அமைக்கப் பட்டிருக்கின்றன. புதிதாக ஒரு மாதிரி வண்டியை இப்பொழுது செய்வதென்றால் தொழிற்சாலையையே முற்றும் மாற்றியமைத்தாக வேண்டும். வேறு வகையான ஆயுதங்களும் புதிதாக சேகரிக்க வேண்டும். இதற்குக் கோடிக் கணக்கான ரூபாய்கள் போர்டு கம்பெனியார் செலவிட வேண்டி யிருக்கும். இதைப் பொறுப்பாக அனேக இஞ்ஜினியர்கள் கலந்து யோசித்து முடிவு செய்து தொழிற்சாலையை அதற்குத் தகுந்தபடி அமைக்க வேண்டி யிருக்கும். இதையெல்லாம் உத்தேசித்தால், போர்டு தமது புதிய மாடல் கார் எப்பொழுது வரப் போகிறது என்று கூறாமல் மௌனமாக விட்டு விட்டதைக் கண்டு ஒருவரும் ஆச்சரியமடைய மாட்டார்கள். இன்னும் கூட கம்பெனியார் தேதியைக் குறிப்பிட மறுக்கிறார்கள். எப்படியும் ஆகஸ்டு மாதம் முதலில் புதுமாதிரி வண்டி தொழிற்சாலையிலிருந்து செய்து வெளிவந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

எனெனில் போர்டு இம்மாதிரி புதிய திறுசு வண்டியைச் செய்யப் போகிறதாக வெளியில் பகிரங்கமாக அறிவிப்பதற்கு முன்னதாகவே, பல மாதங்களாக இந்த யோசனை இருந்து வந்ததோடு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்து வந்திருக்கிறார் என்று நிச்சயமாய்க் கூற முடியும்.

எவ்வகையில் அந்த புதிய மாதிரி வண்டி அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் என்று மோட்டார் பித்தர்கள் ஏற்கனவே பலவாறாக யோசனை செய்து எழுதவும், பேசவும் தொடங்கி விட்டார்கள். ஆனால் வியாபாரத்துக்கு ஏற்ற வரையில் தொழிற்சாலையிலிருந்து வண்டி வெளியில் வருகிற வரையில் என்னென்ன திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று ஒருவராலும் அறிய முடியாது. எனினும், பற்பல விதமாகக் கட்டுக் கதைகள் மட்டும் உலவி வருகின்றன. "கியரை" ஏதோ ஒரு வகையில் மாற்றி யிருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். "பிளைவீல் மாக்னடோ" விற்கு பதிலாக "டிஸ்டிரிபியூட்டர்" திறுசு வைத்திருப்பதாக வேறு சிலர் நினைக்கிறார்கள். இஞ்ஜினில் மாறுதல்கள் செய்திருப்பதாகப் பிறர் கருதுகிறார்கள். ஆனால் இக்கதைகள் ஒன்றையும் உறுதியாக நம்ப முடியாது. நாலு "சிலிண்டர்" இஞ்ஜின் தான் இந்த புது மாதிரி போர்டு மோட்டாரிலும் இருக்கும் என்பது மட்டும் ஒருவாறு நிச்சயமாக கூறலாம். ஆனால் போர்டு விடுத்துள்ள அறிக்கையிலிருந்து இந்த புது வண்டி அதிக வேகமாய்ப் போகுமென்பதோடு, நன்றாய் அடங்கியும் ஓட்டக் கூடியதாயிருக்குமென்றும், விலையும் மலிவாயிருக்கப் போவதோடு, நல்ல உயர்ந்த தரமுள்ளதாகவுமிருக்குமென்றும், இதைச் செய்வதற்கு அதிகப் பணம் செலவழிந்தாலும், ஓட்டுவது முதலிய செலவுகள் மிகக் குறைவாக இருக்கும்படி அமைக்கப்படுமென்றும் தெரிகிறது.

போர்டு இதுவரையில் 1½ கோடி வண்டிகள் செய்து முடித்தாய் விட்டதாக உணர்ந்தோம். 15,000,000—வது வண்டி செய்து முடிந்து வெளியே வந்ததும், ஹென்றி போர்டின் மகன் எட்சல், வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டு இஞ்ஜினை முடுக்கி விட்டார். அவருக்குப் பின்னால் ஹென்றியும் ஏறிக் கொண்டார். பிறகு கொட்டுகிற மழையில் மேல் மூடியைக் கூட மாட்டாமல் இருவரும் 15 மைல் தூரத்திலுள்ள டியர்பார்ன் என்ற இடத்திற்குச் சவாரி போனார்கள். அவ்விடத்தில் ஹென்றி போர்டால் முதன் முதல் செய்யப்பட்ட மோட்டாருடன் இந்தக் கடைசியாக செய்யப்பட்ட மோட்டாரையும் ஓட்டிப் பார்த்தார்கள். ஹென்றியே முதன் முதல் தாம் செய்த வண்டியை ஓட்டினார். சினிமா படக் காட்சிகளைச் சேர்க்கவர்களும், பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் அதைப் படம் பிடித்தார்கள். அந்த முதல் வண்டியைப் பற்றி அவர் பின் வருமாறு உரைத்தார்:—

"இந்த வண்டி 1902-ல் செய்யப்பட்டது. ஆனால் ஒரு வருஷம் வரையில் அது சரியாக ஓட வில்லை. டிராய்ட்டைச் சுற்றி 25 மைல் வேகத்தில் அதை ஓட்டுவது வழக்கம்; பலருடைய நகைப்புக்கு அது இடமாயிருந்தது. அதைக் கண்டு சிரிக்காதவர்களுக்கு இதைக் கண்டால் பயம்; ஆனால் தான் அவர்கள் சிரிக்க வில்லை. இந்த வண்டியை சார்லஸ் எயின்ஸ்லி என்பவருக்கு 160 டாலருக்கு விற்றேன். அதை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் அவமானமா யிருக்கிறது. இந்த வண்டி எங்கே; யாரிடம் போயிற்று என்பதைக் கண்டு பிடிக்கவும் கஷ்டப்பட்டோம். அதை நாங்கள் 1903—ம் ஆண்டில் விற்றதற்குப் பின் எவ்வளவோ மைல் ஓடியிருக்கிறது; எத்தனையோ கை மாறியிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் தான் ஓஹியோ என்ற இடத்தில் அதைக் கண்டு பிடித்தோம். திரும்பவும் அதை நாங்கள் வாங்கினோம். கொஞ்சம் புதுப்பித்த பின், புது வண்டியைப் போலவே அது ஓடுகிறது".

20 வருஷ காலமாய் "டி" மாடல் வண்டி பெருவாக பொது ஜனங்களால் அபிமானிக்கப் பட்டு வந்திருக்கிறது. 1½ கோடி வண்டி செலவா யிருப்பதே அதற்குச் சான்றாகும். அதைப் போல் வேறெந்த மாதிரி மோட்டாராவது இனி அவ்வளவு சர்வ சாதாரணமாய் எல்லோராலும் உபயோகிக்கத் தகுந்தவாறு இருக்குமா என்பது சந்தேகம். எல்லாம் போகப் போக நாளடைவில் தான் தெரிய வேண்டும்.

---

# தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

## ஒன்பதாம் அத்தியாயம்.

### 1. போயர் யுத்த ஆரம்பம்.

போயர் யுத்தம் துவங்கிய காலத்தில் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் எந்நிலைமையிலிருந்தன ரென்றும், அது காறும் அந்நிலைமையைச் சீர்ப்படுத்த என்னென்ன முயற்சிகள் செய்யப்பட்டன வென்றும் சென்ற அத்தியாயங்களில் கூறினேன்.

1899-ம் ஆண்டில் டாக்டர் ஜேம்ஸன், தங்கச் சுரங்க முதலாளிகளுடன் அவர் செய்த சதியாலோசனையின்படி ஜோகானிஸ் பர்க்கைத் தாக்கினார். ஜோகானிஸ்பர்க் பிடிபட்டபின்னரே, போயர் அரசாங்கத்துக்கு அச்செய்தி தெரியவருமென்று சதியாலோசனைக்காரர்கள் எண்ணினார்கள். ஆனால் இந்த உத்தேசத்தில் டாக்டர் ஜேம்ஸனும் அவரது கூட்டாளிகளும் பெருந்தவறு செய்தவர்களாயினர். அப்படியே சதியாலோசனை ஒருக்கால் முன்னதாக வெளியாகிவிட்டாலும், ரொடீஷியாவில் துப்பாக்கிப் பயிற்சிபெற்ற சிறந்த குதிகாரர்களைப் பயிற்சி சற்றும்இல்லாத போயர் குடியானவர்கள் என்ன செய்ய முடியுமென்று அவர்கள் இறுமாந்திருந்தார்கள். இதிலும் அவர்கள் மோசம் போனார்கள். அன்றியும், ஜோகானிஸ்பர்க் வாசிகளில் பெரும்பான்மையோர் தங்களைப் பரிந்து வரவேற்பார்களென அவர்கள் எண்ணியதும் தவறாகவே முடிந்தது.

அக்கிராசனர் குருகர் முன்னரே எல்லா விவரங்களும் அறிந்திருந்தார். ஆழ்ந்த யோசனையுடனும், சாமர்த்தியத்துடனும், அந்தரங்கமாகவும் அவர் டாக்டர் ஜேம்ஸனை எதிர்ப்பதற்கும், அதே சமயத்தில் அவர் சகாக்களைக் கைது செய்வதற்கும் ஏற்பாடு செய்திருந்தார். எனவே, டாக்டர் ஜேம்ஸன் ஜோகான்ஸ் பர்க்கின் அருகில் வருவதற்கும் முன்னால் போயர்கள் அவர் மீது துப்பாக்கிக் குண்டுகள் பொழிந்து வரவேற்றார்கள். இந்த சைந்யத்துடன் எதிர்த்துச் சண்டையிட டாக்டர் ஜேம்ஸனின் மனிதர்கள் சித்தமாயில்லை. இவ்வாறே ஜோகானிஸ் பர்க்கில் கலகம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் பூரணமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எவரும் தலை தூக்கத் துணியவில்லை. அக்கிராசனர் குருகரின் நடவடிக்கைகளினால் ஜோகானிஸ்பர்க் செல்வர்கள் பிரமித்துப் போய் வாயிழந்து சும்மாயிருந்தனர். இவ்வாறு அவர் செய்திருந்த சிறந்த ஏற்பாடுகளின் பயனாக, ஆள் சேதமும் பொருட் சேதமும் அதிகமின்றி எதிர்ப்பு ஒடுக்கப்பட்டது.

### சேம்பர்லீனின் தாழ்மையான தந்தி.

டாக்டர் ஜேம்ஸனும் அவருடைய சகாக்களான தங்கச் சுரங்க முதலாளிகளும் கைதி செய்யப்பட்டுத் தாமதமின்றி விசாரிக்கப்பட்டனர். அவர்களில் சிலருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளிகளில் பெரும்பாலோர் லட்சாதிபதிகள். ஆனால் அவர்கள் பட்டப்பகலில் அரசாங்கத்தைத் தாக்கப் படை திரட்டியவர்களாதலால் ஏகாதிபத்திய அரசாங்கத்தார் அவர்களுக்காக ஒன்றும் செய்யக்கூடவில்லை. அக்கிராசனர் குருகர் திடீரென்று மிகவும் பெரிய மனிதரானார். குடியேற்ற நாட்டு மந்திரி மிஸ்டர் சேம்பர்லின் அவருக்குத் தாழ்மையாக ஒரு தந்தியடித்தார். தண்டிக்கப்பட்ட செல்வர்கள் மீது இரக்கங் காட்ட வேண்டுமென்று அவர் வேண்டிக்கொண்டிருந்தார். அக்கிராசனர் குருகர் இராஜதந்திரத்தில் மிகத்தேர்ந்தவர். தென்னாப்பிரிக்காவிலுள்ள எவருக்கும் தமது சுதந்திரத்துக்கு ஊறு செய்யும் வலிமை கிடையாதென்று அவருக்கு நன்கு தெரியும். டாக்டர் ஜேம்ஸனும் அவர் தோழர்களும் தாங்கள் வெகு சாமர்த்தியமாகச் சதியாலோசனை செய்ததாக எண்ணினார்கள். ஆனால் அக்கிராசனர் குருகருக்கோ அது காணப்பட்டது. ஆதலின் அவர் மிஸ்டர் சேம்பர்லினின் தாழ்மையான வேண்டுகோளுக்கிணங்கி மரண தண்டனையை நிறைவேற்றாது விட்டதுடன், எல்லாருக்கும் முழு மன்னிப்பளித்து விடுதலையும் செய்து விட்டார்.

ஆனால் இத்தகைய நிலைமை எவ்வளவு காலம் நீடித்திருக்க முடியும்? ஜேம்ஸன் படையெழுச்சி பெரிய வியாதி யொன்றின் சிறு அறிகுறியே யாகுமென அக்கிராசனர் குருகர் உணர்ந்திருந்தார். ஜோகானிஸ்பர்க் செல்வர்கள் இந்த அவமானத்தைத் துடைப்பதற்குத் தங்களாலான எல்லா உபாயங்களையும் பார்த்துத் தான் விடுவார்கள். மற்றும், எந்தச் சீர்திருத்தங்களை நோக்கமாகக்கொண்டு ஜேம்ஸன் சதியாலோசனை செய்ததாகச் சொல்லப்பட்டதோ அச்சீர்திருத்தங்களை நிறைவேற்றி வைக்க எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஆகவே மேற்படி கோடீசுவரர்கள் சும்மாயிருத்தல் இயல்பன்று. தென்னாப்பிரிக்காவில் பிரிட்டிஷ் ஹை கமிஷனராயிருந்த லார்டு மில்னர் அவர்களுடைய கோரிக்கைகளின் பூரண அநுதாபங் கொண்டவராயிருந்தார். மிஸ்டர் சேம்பர்லினும், சதியாலோசனைக்காரர்களை மன்னித்து விட்டதற்காகக் குருகரின் பெருந்தன்மையைப் பாராட்டி அனுப்பிய செய்தியில் சீர் திருத்தங்களின் அவசியத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார். எனவே, இரண்டிலொன்று தீர்வதற்குச் சண்டை நடந்தேயாக வேண்டுமென்று எல்லாரும் நம்பினார்கள். உயித்திலாந்தர்களின் கோரிக்கைகள் டிரான்ஸ்வாலில் போயர் ஆதிக்கத்தையே ஒழித்து விடும் நோக்கங்கொண்டவையாயிருந்தன. முடிவில் யுத்தம் நேர்ந்தே தீருமென்று இருகட்சியாரும் அறிந்து அதற்குரிய ஆயத்தம் செய்யலானார்கள். இது சம்பந்தமாக நடந்த சொற்போர் குறிப்பிடத்தக்கதாகும். அக்கிராசனர் குருகர் ஆயுதங்களும் யுத்ததளவாடங்களும் தருவிக்கத் தொடங்கியபோது, பிரிட்டிஷார் தற்காப்புக்காகத் துருப்புகள் வரவழைக்க நேரிடுமென்று பிரிட்டிஷ் ஏஜென்ட் அவருக்கு எச்சரிக்கை செய்தார். பிரிட்டிஷ் துருப்புகள் தென்னாப்பிரிக்கா வந்ததும், அக்கிராசனர் குருகர் அதைச் சொல்லிக் காட்டித் தாமும் யுத்த ஆயத்தம் தீவிரமாகச் செய்யலானார். இவ்வாறு இருகட்சியாரும் ஒருவரை யொருவர் குறை கூறிக்கொண்டு தத்தமக்குப் பலஞ் சேர்த்துக் கொண்டிருந்தனர்.

### இறுதிக் கடிதமும் படையெடுப்பும்.

அக்கிராசனர் குருகர் தமது யுத்த ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்ததும் இனிமேல் தாமதிப்பது சத்துருக்களுக்கு உதவி செய்வதே யாகுமென்று கண்டார். பிரிட்டிஷாரிடமுள்ள படைகளும் பணமும் வற்றாத சமுத்திரம் போன்றவை. ஆதலின் அவர்கள் அவசரப்படவேண்டிய அவசியமில்லை. நிதானமாக யுத்தத்துக்கு ஆயத்தம் செய்யலாம். அதே சமயத்தில் யுத் [illegible] யும்படி குருகரைக் கேட்டுவரலாம். அக்குறைகள் நிவர்த்தி செய்யப் படாமையால் யுத்தம் செய்வதைத்தவிர தங்களுக்கு வேறு வழியில்லை என்று உலகத்துக்குக் காட்டலாம். அப்படி அவர்கள் பலமாகத் தயார் செய்து கொண்டு யுத்தம் தொடங்குங்கால் போயர்களால் எதிர்த்து நிற்க முடியாமல்போய்விடும். பிரிட்டிஷ் கோரிக்கைகளைத் தாழ்மையாக ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். இவைகளையெல்லாம் அக்கிராசனர் குருகர் நன்கு கண்டார். பதினெட்டு வயதுக்குமேல் அறுபது வயதுக்குட்பட்ட போயர் ஒவ்வொருவனும் சண்டையில் கைதேர்ந்தவனாவான். போயர் ஸ்திரீகள் கூட விரும்பினால் போர் செய்யக் கூடியவர்களாயிருந்தார்கள். போயர்களுக்கு தேசிய சுதந்திரம் ஒரு சமயக் கொள்கையாகவே இருந்தது. அத்தகைய வீர மக்கள், ஓர் உலக ஏகாதிபத்தியத்தினுடையதே சரி, இழிவுபடுத்தப் பட இணங்குவார்களா?

அக்கிராசனர் குருகர் ஆரஞ்சு பிரீஸ்டேட் இராஜ்யத்துடன் ஏற்கனவே கலந்து ஒரு முடிவுக்கு வந்திருந்தார். அவ்விரு போயர் குடியரசுகளும் ஒரே முறையைக் கைப்பற்றின. பிரிட்டிஷ் கோரிக்கைகளை முழுதுமோ, உயித்லாந்தர்களைத் திருப்தி செய்யுமளவாகவோ ஒப்புக்கொள்ளும் உத்தேசமும் குருகருக்குச் சிறிதும் இல்லை. ஆகவே இரண்டு குடியரசுகளும், யுத்தம் நடந்தே தீரவேண்டுமாதலால், பிரிட்டிஷாருக்கு இனி அவகாசங் கொடுப்பது அவர்களுடைய யுத்த ஆயத்தங்களைப் பலப் படுத்தச் சந்தர்ப்பம் கொடுத்ததேயாகும் என்றெண்ணின. இதன்மேல் அக்கிராசனர் குருகர் லார்டு மில்னருக்கு இறுதிக் கடிதம் அனுப்பினார். அதே சமயத்தில் டிரான்ஸ்வால், பிரீஸ்டேட் இராஜ்யங்களின் எல்லைப் புறத்தில் படைகளைத் திரட்டிச் சேர்க்கத் தொடங்கினர். இதன் முடிவு என்னாகுமென்பது யாருக்குத் தெரியாது? உலக முழுவதும் பரவியிருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த அச்சுறுத்தலுக்குப் பணிந்து விடுமா? இறுதிக் கடிதத்தில் குறிப்பிட்ட காலமானதும் போயர்கள் மின்னல் வேகத்தில் முன்னேறிவந்து லேடிஸ்மித், கிம்பர்லி மேப்கிங் நகரங்களை முற்றுகையிட்டார்கள். இவ்வாறு அந்தப் பெரிய யுத்தம் 1899-ம் ஆண்டில் ஆரம்பமாயிற்று. போயர்களை இந்தியர்கள் கேவலமாக நடத்தியதும் யுத்தத்தின் காரணங்களில் ஒன்றென்று பிரிட்டிஷாரால் சொல்லப்பட்டதென்பதை நேயர்கள் நினைவில் வைக்க வேண்டும்.

---

## தேவை.

திருவக்கபட்டி போஸ்ட் மேலக்கோட்டை யூரிலுள்ள "இந்து நாடார் எலிமெண்டரி ஸ்கூல்" லுக்கு ஹையர் கிரேடு ட்ரெயினிங் பாஸ் பண்ணின ஒரு உபாத்தியாயர் ஜூலை மீ 1 உ முதல் தேவையா யிருக்கிறது. வரக்கூடியவர் அப்ளிகேஷன் எழுதி மானேஜரிடம் நேரிற் பேசிக் கொள்ளலாம்.

விலாசம்:—

எஸ். தேய்வநாயக நாடார்,

மானேஜர்,

"இந்து நாடார் எலிமெண்டரிஸ்கூல்"

மேலக்கோட்டையூர்,

திருவக்கபட்டி (போஸ்ட்).

---

## லட்சம் ரூபாய்ப்புன்னகை.

உலகில் தன் இரண்டாம் வயதில் பணம் சம்பாதிக்கத் தொடங்கிய குழந்தை ஸ்நூகம்ஸ் என்னும் சினிமா நடிகன் ஆகும். அமெரிக்காவில் சினிமா படம் தயாரிக்கும் ஒரு கம்பெனியார் ஒரு நாடகத்திற்குப் போக்கிரித்தனமான புன்னகையுள்ள ஒரு குழந்தை வேண்டுமென்று விளம்பரம் செய்திருந்தார்கள். அங்ஙனமே அநேக குழந்தைகள் அவற்றின் பெற்றோரால் கொண்டு வரப்பட்டன. அக்குழந்தைகளில் ஸ்நூகம்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டான். இப்போது ஸ்நூகம் ஸுக்கு நான்கு வயதாகிறது. அவனுடைய வருஷச் சம்பளம் 7000 பவுன்!—ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபா!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection